

# விடுதலையும் புதிய எல்லைகளும்

மு.பொன்னம்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

322.42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

700/-

பொது சன நூலகம்
27 SEP 1996
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# விடுதலையும் புதிய எல்லைகளும்

38 R-C

PUBLIC LIBRARY
JAFFNA.

117030

மு. பொன்னம்பலம்

117030
Rare Coll

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

அன்றொருநாள் அவனை
சிறைப்பிடித்து அவர்கள்
சிலுவையில் அறைந்தனர்.
அறைந்த சிலுவையே
அவன் விடுதலையாகி
நால்வழிகாட்ட
அவ்வழி நடந்தான்.
அந் நால்வழி ஊற்றுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

117030
Rare. Coll.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'விடுதலையும் புதிய எல்லைகளும்' என்னும் இத் தொகுப்பில் அடங்கியுள்ள எனது ஆக்கங்கள் பற்றி சில வார்த்தைகள்:

ஒவ்வொரு மனிதனது விடுதலையும் அவனவன் அறிவுக்கேற்ப நடைபெறுகிறது.

ஒரு சமூகத்துக்கும் இனத்துக்கும் அப்படியே.

அதனதன் அறிவுக்கேற்ப அதன் விடுதலை குறுகவும் விரியவும் செய்கிறது.

விடுதலையின் எல்லைகள் எமதறிவின் எல்லையைச் சுட்டுகின்றன.

விடுதலைக்கு எல்லையில்லை; எல்லைகளை நாமே வகுக்கிறோம். நமது செயல்கள் சிந்தனைகள் வகுக்கின்றன.

ஒரு மனிதனது, ஒரு சமூகத்தது சிந்தனை, கலை, கலாசாரத்திலிருந்து அதன் விடுதலையின் தன்மையை உணரலாம்.

ஒரு மனித நாகரிகமென்பது, அம் மனிதசமூகம் அனுபவிக்கும் விடுதலையின் ஆழத்தைக் காட்டுவது.

நாம் ஒவ்வொருவரும் நமக்கேயுரிய ஒவ்வொரு சிந்தனைத் தளத்தின் கைதிகள்.

எமது சந்தோசம் என்பதும் அந்தத் தளத்தின் விரிவையும் குறுக்கத்தையும் பொறுத்தது.

ஒரு சாதாரண லௌகீகனுக்கு போகமும் செல்வமும் சந்தோசம் தரும் விஷயங்கள்.

ஆனல் ஞானிக்கோ அவை சந்தோசத்துக்கு பெரும் தடையானவை.

கர்ணனுக்கோ அவன் செய்த தர்மமே அவன் விடுதலைக்கு தடையாக நின்றது.

அவனவன் அறிவின் சார்புக்கேற்ப அவனவன் சந்தோசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

எல்லா அறி[illegible]தன் சந்தோச முகநோக்குடையவை. அந்த சந்தோச முகநோக்கே நம் மையம். அங்கு நாம், நான் ஆகிறேன்.

ஆகவே நாம் நம்மாலேயே சிறைவைக்கப்பட்டுள்ளோம்.

அந்நிய ஆதிக்கத்தை எடுத்தெறிவதும் அதற்கு அடங்கிப்போவதும் நமது சிந்தனை ஆழத்தையும் வலுவையும் பொறுத்ததே.

ஆகவே நாமே நமது விடுதலையைத் தீர்மானிப்பவர்கள். நாமே நமது விடுதலையின் குணும்சங்களைத் தீர்மானிப்பவர்கள்.

பல்வேறு சிந்தனைத் தளத்துக்குரிய விடுதலை முயற்சிகள் இத்தொகுப்பில் காட்டப்படுகின்றன.

ஆனால் அவையெல்லாம் எல்லையற்று விரியும் விடுதலையின் பின்னணியிலேயே வைத்துக் காட்டப்படுகின்றன.

அதனால் ஒவ்வொரு தளமும் விடுதலையின் ஒவ்வொரு எல்லைகளாக நிற்கின்றன.

அதேநேரம் ஒவ்வொரு தள எல்லைகளும் எல்லையின்மையின் குறிகாட்டிகள்.

''நாங்கள் மலைநாட்டு மக்கள்'' என்ற ஆக்கம் இந்திய வம்சாவழியினரைச் சுட்டலாம். எங்களையும் சுட்டலாம். ஏன் இந்தப் ''பிரபஞ்சப் பிரஜைகள்'' அனைவரது விடுதலை முகநோக்கையும் சுட்டலாம். அப்படியே ஒவ்வொன்றும். அவற்றைத் தீர்மானிப்பது உங்கள் அறிவின் எல்லைகள்.

எனது ஆக்கங்களின் விடுதலை உங்கள் அறிவின் எல்லைகளைப் பொறுத்தது.

இங்கு தரப்பட்டுள்ள ஆக்கங்கள் தத்தம் விடுதலைப்பாங்கான உருவங்களையே கொண்டுள்ளன. இவற்றின் உருவங்கள் அவை தரும் கருத்தின் இயல்பால் தரிக்கப்பட்டவை. அதனால் இவை உங்களுக்குத் தெரிந்த கவிதை, கதை, கட்டுரை என்கிற எல்லைக் கட்டைகளால் வரம்பறையப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
117030

ஆனுல் அந்த எல்லேக் கட்டைகளைக் கொண்டே வெவ்வேறு வரம்பு முறைகள் சுயவியக்கம் கொண்டுள்ளன. அந்த முறையைத்தான் மு. த. ''மெய்யுள்'' என்ருர்.

இந்நூலின் தலைப்பு அமரர் மு. த. தனது விமர்சனத் தொடர் ஒன்றுக்கு பாவித்ததாகும். ''போர்ப் பறை'' நூல் வெளிவருவதற்கு முதல், அந்நூலில் இடம்பெறும் சிலவற்றின் முன்னேட்டமாக இதை எழுதினுர். அதனுல் அக் கட்டுரைத் தொடர் பிரசுரத்திற்கு தேவையற்றதாக இருப்பதால், அதன் தலைப்பை, மு. த. வுக்குரிய நன்றிக் கடப்பாட்டோடு இங்கு பாவிக்கிறேன்.

இந்நூலில் இடம்பெறும் ''மலைநாட்டு மக்கள்'' ''புரட்சி மூலம்'' ஆகிய இரண்டு ஆக்கங்களும் முறையே 1972, 1973ல் வெளிவந்தவை. ஏனையவை 1982-ம் 1984-ம் இடையில் எழுதப்பட்டவை.

இந்நூலை வெளியிடுவதற்கு முழுமுயற்சி எடுத்து வெற்றிகண்ட கவிஞர் சு. வில்வரத்தினத்துக்கும், இதற்கு அன்புடன் நிதியுதவியளித்த என் நண்பன் வே. செல்லத்துரைக்கும், அழகுற நூலை வெளியிட பலவகையிலும் உதவிய திரு. பத்மநாப ஐயருக்கும், ஓவியம் தந்த இளங்கலைஞனுக்கும், இதன் பிரதிகளைத் தட்டச்சில் படியெடுத்துதவிய என் மனைவிக்கும் எனது நன்றிகள்.

மு. பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# பொருளடக்கம்

1. நாங்கள் மலைநாட்டு மக்கள்
2. ஜுலை 1983
3. குழந்தைகளே உங்கள் இழந்த இராச்சியத்தை மீட்டெடுங்கள்.
4. முன்னிரவின் மோகனம்
5. இயற்கையுள் விழுந்த இயந்திர உறுமல்.
6. வெள்ளமும் பள்ளமும்.
7. செல்லும் வழி விடுதலை.
8. அதிகாரம் புரியாத சமன்பாடு.
9. அலையெடுத்த கடல்.
10. வீடுகளும் கூடுகளும்
11. வீரத்தைத் தூக்கு
12. சடங்குகள் நீத்த தகனங்கள்.
13. புரட்சி மூலம்.
14. வீடு.
15. மனத்தோப்பு.
16. இருப்பின் அதிகரிப்பு.
17. விடுதலையும் புதிய எல்லைகளும்.
18. அம்புலி மாமா.
19. ஆக்காத்திகள் — புதியதும் பழையதும்
20. ஓர் எழுச்சிப் பாடல்.
21. சொற்களும் சும்மா இருத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் மலைநாட்டு மக்கள்

மலைநாட்டவர்கள் நாங்கள்
மலைநாட்டு மக்கள் நாங்கள்
கோப்பிக்கும், தேயிலைக்கும், றபருக்கும்
இங்கு எவ்வளவு வயது ஆகிறதோ,
அவ்வளவு வயது ஆகிறதாம் எங்களுக்கும்.
தேயிலையையும் றபரையும் இங்கு விதைத்த
வெள்ளைக்காரன் எங்களையும் கூட விதைத்தான்.
நாங்கள் விதைக்கப்பட்டது வளர்வதற்காகவல்ல -
உரமாக உறிஞ்சப்படுவதற்காக.
அட்டைகள் எங்கள் இரத்தத்தை உறிஞ்சின,
மனித அட்டைகளோ, இரத்தத்தோடு எங்கள்
உடல் உயிர் பொருள் உரிமை அனைத்தையுமே உறிஞ்சின.
அதனால் நாங்கள் மனிதர்களல்ல.

றபர் மரம் உதவாதபோது வெட்டி வீழ்த்தப்படுகிறது.
நாங்களும் அப்படியே.
ஆனால் ஒரு வித்தியாசம்
விளைச்சல் உள்ளவரையும், மரங்கள்
போசிக்கப்படுகின்றன; பாதுகாக்கப்படுகின்றன.
நாங்களோ விளைச்சலைத்தரும்போதும்
நாய்களாய் பேய்களாய் லயங்களில்
அடைபட்டுக் கிடக்கிறோம் - தடுப்புப் பண்ணைகளில்
தவித்த யூதர்களைப்போல்.
அதனால் நாங்கள் மரங்களும் அல்ல.

இப்போ -
எம்மை உறிஞ்சியவர்கள் சொல்லுகிறார்கள்,
எங்கள் உழைப்பென்பது நாட்டுக்கு இழப்பாம்.
எங்கள் விளைச்சல் காலம் முடிந்துவிட்டதாம்
நாங்கள் தேங்காய்ச்சொட்டுக்கும் மாசுக்கும்
வந்தவர்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை இங்கிருந்து விரட்டுவதாலேயே
நாடு உருப்படுமாம்
காரணம் -
சீதோஷ்ண நிலைக்கேற்ப பயிரிடப்படும்
மரங்களைப்போலவே
நாங்கள் இங்கு பயிரிடப்பட்டோம்
இப்போ, எங்களுக்குச் சார்பாக வீசிய பருவக்காற்று
மாறி வீசுகிறது.
அதனால் நாங்கள் பிடுங்கி எறியப்படவேண்டிய
களைகளாம்.

எங்களைக் காப்பாற்ற யாருமில்லையா?
எங்களைக் காப்பாற்ற நாங்கள் உருவாக்கிய
காங்கிரஸ் கூடாரங்கள் -
எங்களை மேய்த்து, எங்கள் பசளைகளை விற்று
வியாபாரம் நடக்கிறது.
அந்தக் கூடாரங்கள் இருப்பது
எங்களைக் காப்பாற்றவல்ல, எங்களை மேய்ப்பதற்காக.
இப்போ செங்கொடிக் கூடாரங்கள் வேறு சேர்ந்துள்ளன.
இருந்தும் என்ன?
நாங்கள் இப்போ நாடற்றவர்கள்.
நாங்கள் அங்குமில்லை இங்குமில்லை
நடுக்கடலில் வைத்து "பொஸ்டன் தேநீர் விருந்து"
ஆடப்படுகிறோம்.
அதற்காக நாம் பயந்துவிடவில்லை
மாறாக, எங்கள் உடலில் புதுயுக மூச்சேறுகிறது.
"பொஸ்டன் தேநீர் விருந்து" புதுயுக விடுதலை ஒன்றை
உருவாக்கிற்று.
நாங்கள் உருவாக்கப்போவது எதையோ?

நாங்கள் உருவாக்கப் போவதெல்லாம்
தேயிலைத் தோட்டத்தோடும் றபர் தோட்டத்தோடும்
எங்கள் வயதை அளக்கமுயலும்
அறியாமைச் சட்டங்களை தகர்க்கும் சட்டங்களை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உருவாக்கப் போவதெல்லாம்
சாதி, இனம், சமயம், வர்க்கம் என்கின்ற
சீதோஷ்ண நிலைகளால் பாதிக்கப்படாத
புதுமனித பூமியை.
நாங்கள் பிரபஞ்சப் பிரசைகள்.
மனிதகுலத்தின் வம்சாவழிகள்.

அதனால் -

குறிக்கப்பட்ட ஒரு நாட்டுக்குள் அடங்காத
எந்நாட்டுக்குமுரிய எழுச்சிகள் நாங்கள்.

நாங்கள் "பணியக் கணக்கிலி"ருந்து
"மேல் கணக்கு" க்குப் பாயப்போகிறோம்
கொல்லிமலையிலிருந்து நீலமலைக்குத்
தாவப்போகிறோம்.
ஆனால் அதை அறியாத இவர்கள் -
"பணியக் கணக்கி" னதும் கொல்லி மலையினதும்
சட்டங்களையும் குணங்களையும் கொண்டுதான்
இன்னும் எங்களை அளக்கப் பார்க்கிறார்கள்.
இவர்களது இந்தக் குணங்கள் -
பணியக் கணக்கு மனங்களுக்குரியவை.
அதனால் இவர்கள் எங்களை விளங்கவில்லை.

நாங்கள் நசுக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும்
மறைக்கப்பட்டும் கிடந்தபோதும்
புதுயுக மலையேறிகள் என்பதை இவர்கள் உணரவில்லை.
நாங்கள் எடுக்கும் பால் ஞானப்பால்.
எங்கள் கைகள் பறிப்பவை ஞானக் கொழுந்துகள்.
அவற்றால் இவர் காணும் சாதி, இனம், மதம், வர்க்கம்
எல்லாம் எரியூட்டப்படப் போகின்றன.

ஏனெனில்,

உயர் மனித விடுதலைக்காய் நிற்கின்றோம் நாங்கள்.
நாம் மலைநாட்டு மக்கள்.
உயர் மலையின் மணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜுலை 1983

ஜுலை 1983 - பெரியது, இனியது,
போற்றுதற்குரியது.
கொழும்பு மாநகரைக் கொளுத்திய இந்நாள்
தமிழர் விடுதலைத் தீயையும் வளர்த்தநாள் அன்றோ.
அதனுல் -
அது பெரியது, இனியது அதைப் போற்றுதும்.

இந்நாள் -
நம் உடைமைகள் பல வெந்தன.
நம் உயிர்களும் வெந்தன.
ஆயினும் ஆயினும்
வெந்த இந்நாளில் -
நம் உந்தியில் பூத்ததே விடுதலைச் சிருஷ்டியே.
அது பெரியது, அதனுல் ஜுலையைப் போற்றுதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாள் -

கீழ்மையில் மிதந்தநாள்
கீழ்மையில் ஆழ்ந்து அதன் எல்லையைக் கண்டநாள்
கீழ்மைகள் கொடியன, வெறுப்புக்குரியன.
ஆயினும் ஆயினும்
கீழ்மையில் பூத்ததே விடுதலைத் தாமரை.
கீழ்மைப் பசளையில் விளைவதோ விடுதலை?
அந்தக் கீழ்மையும் பெரியது, இனியது அதைப் போற்றுதும்.

இந்நாள் -
நம் பிழைப்புகள் போயின.
செல்வங்கள் சிதைந்தன.
குளுமையூட்டும் சொகுசும் போயிற்று.
எல்லாம் இழந்த இத்துயர் நாளில்
எழுந்ததே விடுதலைக் கொழுந்துகள் சுயத்திலே,
அந்தத்துயர் பெரியது அதைப் போற்றுதும் போற்றுதும்.

இந்நாள் -
உழைப்பு, உண்ணல், சுகிப்பு என்னும்
போதையில் கிடந்த நாம்
போதையில் கிடந்த நாம்
அறிவு, ஆண்மை, அமைதி செயல்படும்
வீட்டை நினைந்தனம்
வீட்டை நினைந்தனம்
விடுதலை என்பது வீடெனக் கண்டோம்
அது இனியது அதைப் போற்றுதும் போற்றுதும்.

117030



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளே,

## உங்கள் இழந்த ராச்சியத்தை மீட்டெடுங்கள்

என் அருமைக் குழந்தைகளே வாருங்கள்.
நேசிப்புக்கெனவே பிறந்த
என் அருமைக் குழந்தைகளே இப்படி வாருங்கள்.
புதுயுகன் வா,
உமையாள் வா,
கிருபா வா,
கேசவன் வா,
ரட்சகி வா,
யசோதா வா.
ஓடிவர முடியாதவர்கள் தவழ்ந்து வாருங்கள்.
தவழ்ந்தும் வரமுடியாதவர்கள் ஊர்ந்து வாருங்கள்.
ஊர்வதும் தவழ்வதும் ஒரு குறையல்ல.
குறையெல்லாம் உங்கள் திறனை மறந்ததே.
வளர்ந்து பெரியவர்களானால்தான் உங்களுக்கு
உலகு பற்றிய அறிவு புரியுமோ?
தவழ்ந்துவரும் போதே தத்துவங்கள் தெரியாதா?
தெரியக்கூடாதா?
ஊர்ந்துவரும்போதே உயர் லட்சியங்கள் நோக்கி
மனம் எழுச்சி கொள்ளாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணெய் உண்ட கண்ணன் வாயினுள்
பிரபஞ்சம் திரண்டதே. தெரியுமா?
இதழ்வழியே பால்வடிய தேவாரம் பாடிற்றே
ஓர் சிறிசு, அறிவீரா?
பாலுண்ணும் போதே ஆல்விதையுள் ஆலமரம்
இருக்கின்ற நுட்பங்கள் தேரீரோ?
மழலை பேசிக்கொண்டே உலகளந்தான் கண்ணன்
அவன்தான் உங்கள் லட்சியம்.
அவன்தான் உங்கள் ராச்சியம்.
சின்னஞ்சிறிய உங்கள் உருவங்கள் ஒவ்வொன்றிடமும்
உலகங்கள் உருளட்டும்.
நீங்கள் வளர்ந்துவரும் வரை காலமில்லை.
பொறுத்திருக்க நேரமில்லை.
மீட்டெடுங்கள். மீட்டெடுங்கள்.
இழந்த உங்கள் ராச்சியத்தை மீட்டெடுங்கள்.
குழந்தையாய் இருக்கும்போதே, மீட்டெடுங்கள்.
குறுஞ்சிரிப்பும், மழலையும், களங்கமின்மையும் இருக்கும் போதே
பெருந்திறனும் பேரறிவும் உமக்காகுக.
ஆயர்பாடியை மீட்டெடுங்கள்.

வளரமட்டும் காத்திருக்கும்
கொடுமையைக் கொல்லுங்கள்.
உருவில் லிலி புற்றன்ஸ்.
ஆனுல் செயலில், திறனில், அறிவில்
அண்டங்கள் பெயரட்டும்.
அணுவைப் பிளந்தால் அண்டகோளங்களின்
உட்செறிவு.
என் கண்ணன்களே நீங்கள் வாயவிழ்ந்தால்
அண்டசராசரங்கள் உட்திரள்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னிரவின் மோகனம்

முன்னிரவு
மேற்கில் விழும் பிறை.
வீழும் பிறையோடு சிலந்திவலை போல்
இழுபட்டுக் கொண்டோடும் ஒளித்திரள்.
ஒடுங்கும் ஒளித்திரளின் ஓரக் கசிவில்
மஞ்சள் அப்பி முகத்தைத் துடைத்துக் கொண்ட
கருமோகினிபோல் மயலூட்டும் புறவுலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் மோகனம்,
ஏதோ அதன்பின் இழுபடும் அரவம்.
யார் மோகினியைத் தொடர்வது?
யார் வருகிறுர்?
எந்த அரக்கன்?
எங்கும் ஓர் இனந்தெரியாத துயரின்
எதிர்பார்ப்பு.
எல்லாத் திசையும் அதன் வாடையின்
அடைவு.

இடைக்கிடை உயிர்த்தெழும் காற்றில்
தலையாட்டும் இருள்பூசிய மரக்கிளைகள்.
திடீரென வடக்கிலிருந்து மேலெழுந்து
வந்துகொண்டிருக்கும் சுடலைக் குருவிகளின்
விட்டுவிட்டுக் கேட்கும் அலறல்
நாயொன்றின் தூரத்து ஊளை -
எல்லாம் அதே துயரை உள்ளொலிக்கும் பின்னணி.
இயற்கை எடுத்த மோகனம்.
யாரைக் கொல்லும் ஆயத்தம்?
தொட்டதெல்லாம் நெருப்பாக்க நினைக்கும்
பஸ்மாசுரர்கள் இன்னும் இருக்கிறுர்களா
அழிய?

அப்படியாஞல்?
மேற்கில் வீழும் பிறை?
இன்று கூத்தன் தலைதவறி வீழினும்
நாளை •
மோகினியாய் பொங்கியெழும்
கூர்ப்புடைய எரிகோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையுள் விழுந்த இயந்திர உறுமல்

கடற்கரை அருகே ஓர் தென்னைமரம்.
பரந்த கடலின் வடக்கு எல்லையாய் தொடுவானம் நிற்க,
தெற்குக் கரையின் எல்லையில் இந்தத் தென்னை.
தெற்கிலிருந்து சோளகம் எழுகிறது.
தென்னை தன் கைகளை எல்லாம் கடலை நோக்கி நீட்டி,
எதையோ யாசிப்பது போலவும், எல்லையற்ற
பரம்பொருளின் முன்னே கைகளைப் பரப்பி
இறைஞ்சும் பக்தனைப் போலவும் மாறுகிறது.

வடக்கிலிருந்து வாடையெழும்போது, தென்னையில்
விழுந்த சிறுகுனிவு நிமிர, குளித்துவிட்டு
கூந்தலை உலர்த்தும் பெண்போல் - அதுவும்
தன்னைக் காமுற்று நிற்கும் காதலன் முன்னே-
தலையை சிறிது ஓரம் சாய்த்து, கைகள் இரண்டையும்
உயர்த்தி கூந்தலை நீவிவிடும்
பெண்ணின் பராமுகப் பெருமிதத்தோடு
தென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ வாடையும் இல்லை, சோளகமும் இல்லை.
மழைவருமுன் ஏற்படும் காற்றுவிழுந்த திடீர் அமைதி.
தென்னை ஆரவாரம் களைந்து, அசையாது
கரையில் ''இருத்தல்'' செய்கிறது, நெய்தலுக்குரிய
இரங்கலோடு.

யாருக்காக காத்திருக்கிறது? இரங்குகிறது?
கடலின் நடுவே சிறுகட்டுமரம்.
அலைகளின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஏற்ப
இடைக்கிடை அதன் இருபக்க முனைகளின்
முன்னீட்டல், அவ்வளவே.
அதற்கப்பால் நேவிகப்பல் ஒன்றின் உறுமல்.
தென்னை, கட்டுமரம் பத்திரமாய் கரைசேர
வேண்டும் என்பதுபோல் தியானித்து நிற்கிறது.

காற்றில் கனமேறுகிறது.
அந்தக் கனம் குளிரின் சுமை.
மழைக்கால மாலை வந்துகொண்டிருக்கிறது.
கடலின் வெண்ணுரை கக்கிய தூரப்பிரதேசம்
கருமை படர, கட்டுமரத்தின் கருமுனைகள்
அழுத்தம் அழிந்து கரைவனபோல் ......
தூர அடிவானப் பரப்பில் ஊமை வெள்ளிகள்
கண்ணைக் கசக்குவதுபோல் சில சிமிட்டல்கள்.
நிலவை விரும்பாத மழைமேகங்கள் ஊத்தை
சீலைகளை இழுத்துக்கொண்டு திரிவோர் போல்
வானமெங்கும் சிதறலாய் படரல்...

நேவிக்கப்பலின் இரைச்சல் இப்போ மிக
அருகில் கேட்கிறது.
தென்னை ஒருதரம் பெருமூச்செறிந்ததுபோல்
உடல் சிலிர்த்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளமும் பள்ளமும்

வரண்டு காய்ந்து வெடிப்புற்று
நீருக்காய் ஏங்கிக் கிடக்கிறது பள்ளம்.
திடீரென வெள்ளம் புகுகிறது, நீரின் வேஷத்தில்
காமுகனை காதலனென ஏமாறும் பெண்போல்
வெள்ளத்தின் நீர்மையில்
ஏமாறும் பள்ளம்.
காதல் வேகத்தில், ஆசை வேட்கையில்
பள்ளம் தன்னை இழந்து இழந்து
வெள்ளத்தை உள்வாங்குகிறது.
வெள்ளம் அள்ளித் தந்த குளுமையில்
பள்ளம் முற்றாகத் தன்னை இழக்கிறது.
தன்நலம்,
தன்சுகம்,
தன் அன்றையத் தேவை என்ற பிரவகிப்பில்
நீர் எது, வெள்ளம் எது? என்று இனம் பிரிக்க முடியவில்லை
பள்ளத்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ பள்ளம் அங்கே இல்லை.
பள்ளமும் வெள்ளமாயிற்று.
பள்ளத்தை ஆலிங்கனித்த வெள்ளம்
அதன் வெற்றி மதர்ப்பில்
மேட்டு நிலங்களையும் தீண்டத் தொடங்கிற்று.
பள்ளம் மேடு என்ற வித்தியாசம் அற்று
அதன் பாய்ச்சல், வேட்டை, ஆக்கிரமிப்பு.
ஓலைக் குடிசைகளோடு ஓட்டு வீடுகளும்
சேர்ந்து வீழ்ந்தன.
ஆக்கிரமிப்பாளன் அணிந்துவிட்டுத்
தூக்கியெறிந்த குல்லாய்கள் போல்
ஓட்டுக் கூரைகளும் ஓலைக் கூரைகளும்
வெள்ளத்தில் மிதந்தன.

மரங்கள் சரிந்தன, தந்திக் கம்பங்கள் பாறின.
குருவிகள் குந்த இடமின்றி அங்கும் இங்கும்
மேலும் கீழும் அந்தரித்துப் பறந்தன.
வெள்ள அதிகாரத்தின் ஒன்று குவிப்பில்
விளைந்த அனர்த்தங்கள்.

பள்ளத்தின் முன்யோசனையற்ற வெற்றுணர்வக் காதலும்
காதல் என்ற போர்வையில் வெள்ளம் ஆடும் வெறியும்
விளைவித்த அனர்த்தங்கள்
எங்கும் வெள்ளக் காடு.
மூச்சுமுட்டி எல்லாம் அமுங்கும் நிலை.
வெள்ளத்தை அகற்ற வழி?
அதிக காலம் இல்லை —
திடீரென நாற்புறமும் இருந்தும்
மண்வெட்டிகளும் அலவாங்குகளும் எழுகின்றன.
வெள்ளத்தைத் தேக்கும் அடைப்புகள் உடைக்கப்படும் ஓசை,
தகர்க்கப்படும் அதிர்வு.
வெள்ளம் சோ எனும் பீதியுடன்
நாற்புறமும் வடிந்தோடும் அலறல்.
அவ்வேளை —
எழுந்துவரும் ஞாயிற்றின் கதிர்வீச்சு வேறு.

117030 Rare. Coll.
38 R-C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லும் வழி விடுதலை

தமிழ் இனம் தொன்மை மிக்கதாம். இருக்கலாம்.
அதன் கலாச்சாரமும் அத்தகையதாம். இருக்கலாம்.
ஆனால் —
இத்தொன்மையினால் தானோ, இதனிடம்—
மனித பரிணமத்தின் ஆரம்பகால அத்தியாவசியங்களாக
விளங்கிய
வீரம்,
தன் இனக்கூட்டத்துக்கான தியாகம்,
மானம் ஆகியவை எல்லாம்
செலவழிந்த பொருட்களாகி விட்டன, இன்று?

இதனால் தானோ, இன்று
பரிணமத்தின் அண்மைக்கால விருத்திகள் என்று
இவர்களால் பெரிதாகக் கேலிபண்ணப்படும் இனங்கள்,
இவர்களை அடக்கி ஒடுக்கி
ஆளத்தினவெடுத்துக் கொண்டிருக்கும் போதும்
ஆண்மையற்று அடிமைகளாய் இவர்கள்
சுயநலக் குவியலில் தலையைப் புகுத்திக் கொள்கிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக சேவை யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY
JAFFNA.

ரியூரோனிய காட்டுமிராண்டிகளின் பாய்ச்சலுக்கு
தாக்குப்பிடிக்க முடியாது வீழ்ந்தழிந்த ரோமராச்சியம்போல
இவர்களும் வீழ்ந்தழியப் போகின்றனரா?
இதனால் தானோ,
முப்பது வருடகால இவர்கள் விடுதலை வரலாறு,
போராட்டம் என்பது சமரசம் என்றும்
சமரசம் என்பது சுயநலம் என்றும்
புதியசமன்பாடுகளை நமக்கு பாடமாக தந்துள்ளது?
இதன் பின்னணியில்—
விடுதலையை நோக்கி குகைகளில் இருந்துவரும்
வேங்கைகள்—
அவற்றின் போராட்ட முறைகள்—
மனித பரிணாமத்தின் திரும்பிப் போதலாய் இருந்தால் கூட—
பரிணாமத்தின் ஆதி இனம் என்று பீற்றிக் கொள்ளும்
தமிழினம்

தன் விடுதலைக்கு,
புதுத்தள போராட்ட முறைகளை,
அதற்கான புது அலைகளையாவது தரவில்லையே என்று
அங்கலாய்ப்புகள் இதற்குள் எழுந்தால் கூட—
அவை—
அந்த வேங்கைகளின் போராட்ட முறைகள்—
இனியன,
அவை இதம் வழியும் சுதந்திர நகக்கீறல்கள்.
அடிமைத்தனத்தையும் சுயநலத்தையும் விட
பரிணாமத்தின் பின்னடிப்பு வேறு இருக்குமா?

அதனால்,
இந்தச் சூழலில்—
தாயின் கருப்பையில் குனித்திருக்கும்
சிசுவின் விடுதலை நோக்கிய உதைப்புகள்
பெரியன, இனியன, அரியன.

117030



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் புரியாத சமன்பாடு

ஜீப் வண்டிகள் உறும'
சப்பாத்துக்கள் ஒலிக்க,
மக்கள் மத்தியில்
ஏந்திய ஆயுதங்களுடன்
காக்கி உடை ராட்சதர்கள் போல்
அவர்கள்.

அவர்கள் ஏந்தும் ஆயுதமுனைகளின் மோப்பங்களுக்கு
முகம் கொடுக்காது,
மௌனமாய் மக்களோடு மக்களாய் இவர்கள்
நீட்டிய ஆயுதங்களில் பீதியின் நிழல்
மௌன ஊடாட்டத்தில் விடுதலை விரிக்கக்
காத்திருக்கும் உள்வாங்கல்
வீரியத்தின் ஒளிச்சிதறல்.
அந்த ஒளிச்சிதறலில் கண்ணிமைப்புருவங்கள் போல்
பேச்சற்று உள்நடுங்கும் ஆயுதப் பரிவாரங்கள்.
அவர்களின் காக்கி முகாம்கள் கூடக்கூட
இவர்களின் விடுதலைத் தொகைகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன.
அவர்களின் ஆயுதம் கக்கிய சன்னங்களில்
இருவர் கொலையுண்ண
நால்வர் புதிதாக ஜனித்தெழும்
இவர்களின் விடுதலை இனவிருத்தி பற்றி அறியாத அதிகாரம்.
சர்வாதிகாரம் என்பது விடுதலையை
ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு,
தன்னை அறியாமலேயே அதைப் பிறப்பிக்க
யோனி வாயிலில் காத்திருக்கும் மருத்துவச்சி.
சர்வாதிகாரம் சமன் விடுதலை.
எத்தனைதரம் சரித்திரம் இதைக் கற்பித்துக் கொடுத்தாலும்
அதிகார அமர்வுகளுக்கு புரியமுடியாது போய்விட்ட,
மர்மச் சமன்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலையெடுத்த கடல்

ஜன்னலைத் திறந்தால்
கடல் கண்ணுக்குத் தெரிகிறது.
அலைகளின் ஓங்காரம்.
திடீரென என் நெஞ்சப் பரப்பு
வெளியெடுத்துத் திரையிடப்பட்டதுபோல்
கடல் என்முன் விரிகிறது.

அலைகள், அலைகள்...
அலைகளின் ஓங்காரம்.
ஒன்றின்மேல் ஒன்றேறி
புணர எத்தனிக்கும் ''சேமறி'' மாடுகள்போல் சில,
இல்லை,
ஒருவன் கழுத்தின்மேல் ஒருவன் ஏறி
அமுக்கிக்கொண்டு பாய்ந்து வருவதுபோல்...
இல்லை,
ஓவென மேலெழுந்து எதையோ இருஞ்சிப் பிடிக்க
எத்தனித்து தோற்று விழுவனபோல் -
இல்லை, இல்லை -
அப்போ?
''ஐயோ'' என தலையில் அடித்தடித்து அழுது விழுவனபோல்-
ஆம், ஆம், அதுதான். அது இன்னும் ஆழமானல் -
''ஐயோ'' என தலையில் அடித்தடித்து
'ஆமிக்காம்பு'களின் முன், தனயர்களை இழந்த
தமிழீழத் தாய்மார்கள் கூக்குரல் இடுவதுபோல்.
ஆம் அதுதான், அதுதான்.
அதுதான் இன்று, தமிழீழத்தில் வாழும்
எம் நெஞ்சங்களில் வந்து வந்து மோதும்
ஒரே ஒரு காட்சிப் படிமம்.
அலைகள், அலைகள்...
''ஐயோ'' என தலையில் அடித்தடித்து விழும் அலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

அழுகை அடிமைத்தனத்தின் எச்சங்களில் ஒன்று.
அப்போ,
விடுதலை என்பது இன்னும் எம் நெஞ்ச முடிவில்
வான்முட்டும் தூரப்பிரதேசம்.
ஏன் அழுகிறாய்?
எத்தனை இளந்தலைமுறைகள் துடிக்கத் துடிக்க
சுடுபட்டு அழிவதென்றால் -
நேற்றிருந்தவன் இன்றில்லை.
காலை இருந்தவர் மாலை இல்லை.
ஒருசொற்ப காலத்துள் எத்தனை இழப்புகள்.
அழாமல் சிரிப்பதற்குரிய விஷயமா இது?
அப்படியென்றால் ஒருகணப்பொழுதில்
போபால் நகரில் நச்சுவாயுக் கசிவால்
அழிவுற்ற ஆயிரக்கணக்கானோர்?
பஞ்சத்தால் ஒவ்வொருகணமும்
இத்தியோப்பியாவில் செத்துக்கொண்டிருக்கும்
எண்ணிறந்தோர்?
இவற்றை விடவா, உன் அழிவு பெரிது?
மறைமுக விபத்துக்கள், காரணிகள்
என்று முகம் புதைத்து அவற்றைப் பொறுத்துக்கொள்ளலாம்.
ஆனால் இது?
இது என்ன இது?
இது லெபனானில் நடப்பதை விடவா?
ஒரு வியட்னாமில் நடந்ததை விடவா?
ஆனால் இதுவோ ஒரு புதுக்கலவை.
ஜனநாயகப் பூச்சில் ஹிட்லரின் பாசிஸக் கீற்று முனைகளால்
உயிர்கள் குதறப்படும் விகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கு சட்டத்தை தளர்த்தி
மக்கள் ஊடாடலாம என அறிவித்து
அவர்கள் நகருக்குள் ஊடாடும்போது
அரிசி வாங்க வந்தவர்
மரக்சறி வாங்கியவர்
உத்தியோகத்துக்கு ஓடியவர்
தந்தியடிக்க வந்தவர்
ஆஸ்பத்திரிக்கு விரைந்தோர்—இத்யாதி இத்யாதி...
ஆகிய
அனைவரும் திடீரென "பயங்கரவாதிகள்"
என்ற பட்டத்தோடு பஸ்ஸில் ஏற்றப்பட்டால் -
தடுப்பு முகாம்களுக்கு ஹிட்லரின் ஆட்களால்
கொண்டு செல்லப்பட்ட யூதர்கள்போல் -
ஆடுமாடுகள்போல் எந்தவித எதிர்ப்பும் இன்றி
அவர்களால் நாங்கள் இழுத்துச் செல்லப்படும்போது -
அழுவதா நாங்கள்?
அழுகையா நமது ஆயுதம்?
இல்லை,
பாடுங்கள் இப்படி: அல்லது
கோஷியுங்கள் இப்படி:

> எம்மைச் சுடு. எம் நெஞ்சைப் பிள.
> வெகுஜனம் என்னும் ஆயுதம் நாங்கள்
> எம்மைச் சுடு எம் நெஞ்சைப் பிள.
> வெகுஜனம் என்னும் ஆயுதம் நாங்கள்
> விரைவினில் உங்கள் நெஞ்சைப் பிளப்போம்.

அழுகை விடுதலைக்கு விலங்கு
ஆகவே இன்னும் இன்னும் "ஐயோ" என்னும் அழுகைதான்,
வெகுஜனத்தின் ஆயுதமென்றால்
விடுதலை தூரத்தெரியும் தொடுவான மாயைதான்.
எனவே இனி அழுகை ஓயட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

அலைகள்.
ஓங்கார அலைகள்.
இப்போ "ஐயோ" என தலையில் அடித்தழும் படிமம்
நழுவிப்போகிறது
புதிய படிமம் அலைஅலையாய் எழுகிறது
அலையெடுத்த கடல்
அலைஅலையாய் வரும் எழுச்சி, தாக்குதல்.
சிறு நுரைத்தெழும் ஓர் அலை.
நுரைக்க முன்னரே சிதைந்த அலை
நுரைப்பின்றி குரைப்பின்றி திடீரென
மலைபோல் எழுந்து, எதிரியை தலையிலும்
காலிலும் இருவர் பற்றி
ஊஞ்சல் ஆட்டுவதுபோல் அங்குமிங்கும் ஆட்டிவிட்டு
தூர எறிவதுபோல் ஓர் அலை.
அலைஅலையாய் வரும் எழுச்சி, தாக்குதல்
கரையைத் தாக்க எழுந்த ஓர்
சிற்றலை சிதைய முன்னர் இன்னோர்
பேரலை "ஹோ" வென எழுந்து பேரிடத்தை
கௌவுகிறது.
அது பின்வாங்குமுன் மற்றொன்று.
ஒன்றன்பின் ஒன்றாக
ஹோ ஹோ ஹோ வென
பேரலைப் பாய்ச்சல்.
சூறையின் கொடுமை ஓயும்வரை
அலைகள் ஓயவில்லை.

ஒருகாலம் வருகிறது.
அலையெடுத்த கடல் அமைதியின் ஆழ்வில்.
ஆழமான விடுதலை இன்பத்தை மௌனித்தே
அநுபவித்து மகிழும் ஞானிபோல் கடல்.
மேலே தழுவிவரும் மென்காற்றால் முறுவலிப்பாய்
உருளும் மென்னலைகள்
முன்னைய ஆவேசம் தணிந்து
எல்லைக் கரைகளை அன்போடு முத்தமிடும்
அலைகள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளும் கூடுகளும்

நானும் எனது குடும்பமும் என்கின்ற ஒரு கூடு
அவனும் அவனது குடும்பமும் என்கிற இன்னொரு கூடு.
அவர்களும் அவர்களது குடும்பமும் என்று
இப்படியே சமூகக் கிளைகளில் தொங்கும்
கூட்டு வரிசைகள்,
அந்தரக் கூடுகள்போல் தொங்கும் எமது
அந்தர வாழ்க்கை.
என் பிள்ளைகள் என் மனைவியைப் பேணல்,
அவர்களுக்கு இரைதேடல் என்கின்ற
இயக்கத்துள் என் கூடு.
அவனும் அவன் மனைவியை, பிள்ளைகளைப்
பேணல் இரைதேடல் என்கின்ற கூட்டுக்குள்
அவர்களும் மற்றவர்களும் அப்படியே.
அப்படியே.

சிலவேளை அடுத்தவர் கூடுகளுக்கு
ஆபத்து, அந்தரம் நேர்வதுண்டு.
அவ்வேளைகளில் –
நானும் அவனும் சந்தியில் நின்று,
அரைமணித்தியாலமாக
அந்த அநியாயம் பற்றி
ஆயிரம் முகபாவங்களை வரவழைத்து,
குணசித்திரங்களைக் கூப்பிட்டு.
பேசித் தீர்த்ததோடு - இறங்கிற்று பாரம்,
அப்பாடா... நிம்மதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கூட்டுக்குள் தலைபுகுத்தியாயிற்று
சிலவேளை எனக்கும் அவனுக்கும்
நேரடியாகவே ஆபத்தும் அநியாயமும்
நேரும்போது,
செய்வதறியாது நாம் வாய்பிளந்து நிற்க
இன்னொரு நானும் அவனும்
எமது சமூகக் கிளையிலிருந்து சந்தியில்
தோன்றி,
நாம் முன்பு செய்த முகச்சித்திரங்களையே
திருப்பிப்போட்டதோடு, அப்பாடா, விட்டது
தொல்லை,
இப்படியே மற்றவர்களும் அவர்களைத்
தொடர்ந்து அடுத்தவர்களும் -
மனிதனின் இரக்க இயல்பூக்கங்களை
சந்தியில் ஊத்து மேடையேற்றலும்
பின்னர் கூட்டுள் தலையிழுத்து
திரைமறைதலுமாய் தொங்கும் எமது
அந்தர வாழ்க்கை.

ஒருநாளாவது பொது எதிரியை,
பொது ஆபத்தைக் கண்டு
கூடித்திரண்டெழும் குருவிகள் போல்
நானோ அவனோ மற்றவர்களோ அடுத்தவர்களோ-
இருந்ததில்லை.
குருவிகளுக்கு கூடுகள் ஒன்று கூடலின்
சின்னம்.
அவற்றின் கூடுகள் அந்தரத்தில்
தொங்குவன அல்ல
அவை விடுதலையின் ஊஞ்சலாட்டம்.
நமது வீடுகளோ சுயநல அடைப்புள் இருந்து
'திரு திரு' வென முழித்து,
அந்தரத்தில் தொங்கும் ஆந்தை 'முழிசல்' கள்.
நாம் வீடிருந்தும் குடும்பக் கூட்டுள் சிறைப்பட்டோம்,
அவை கூடுகளில் வாழ்ந்தும் வீடு பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரத்தைத் தூக்கு

துப்பாக்கி தூக்கியவனைக் கண்டதும்
தொடை நடுங்காதே
நீ பிறந்தது என்றைக்கோ ஓர்நாள்
சாகத்தான்.
அது நிச்சயம்.
அந்த இடைவெளியில் ஆடும் ஆசைகளுக்காய்
இன்னும் வாழ ஆசைப்பட்டு –
துப்பாக்கி ஏந்தியவனைக் கண்டதும் – அவன்
விடுதலை பதரானாலும் சரி ராணுவ காட்டுமிராண்டியானாலும் சரி -
தொடை நடுங்காதே.

துவக்கினால் தான் உனக்குச் சாவு வரும் என்பது
என்ன நிச்சயம்?
கொலைஞனின் கையில் இருக்கும் துப்பாக்கி
அவனுக்கெதிராய் மாறாதென்பது என்ன
நிச்சயம்?
துவக்கையும் ஒரு பொருளாய் பார்.
உனக்குப் பழக்கப்பட்ட கத்தி, பொல்லு
போலவே அவையும் குணமற்றிருக்கும்
பொருட்கள், நிர்குணிகள்.
அவற்றிற்குக் குணமேற்றுபவன் மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைஞரின் கையில் இருக்கும் துவக்கு
மின்வெட்டுத் தாக்குதலில் உன்கை மாருதா?
கொலைஞரின் துவக்குகள் விடுதலைக்காய்
வேட்டு வைக்காதா?
குணமேற்றுபவன் நீ.
ஆகவே, துப்பாக்கி தூக்கியவனைக் கண்டதும்
தொடை நடுங்காதே.
நீ உன் வீரத்தைத் தூக்கு.
உன் வீரத்தூக்கலில் எதிரி வெடவெடக்கட்டும்.

ஐந்து துப்பாக்கிக் கொலைஞர் ○ ஐம்பதுபேரைக்
கொல்ல, கழுத்தைக் கொடுத்து நிற்கும்
பலிக்கடாவா மனிதர்?
நீ உன் வீரத்தைத் தூக்கு.
உன்னில் ஒருவன் விழலாம், இருவர்
விழலாம் மூவர் அல்லது நால்வர் பலியாகலாம்.
ஆனால் நீ தூக்கிய வீரத்திரட்சியில்
கொலைஞரின் கை தொடர்ந்து நீளாமல்
அவர்கள் அனைவரும் பந்தாடப்படலாம்.
உன்னைக் கொல்வது துப்பாக்கியல்ல
வாழும் ஆசையில் கிடந்தாடும் கோழைமை

ஆகவே,
ஏய்,
வீரத்தைத் தூக்கு
விடுதலையின் எத்தன்மையைச் சுரண்டவரும்
எத்தகைய துப்பாக்கிப் பதர்களும்
வெட வெடக்கட்டும்
வெட வெடக்கட்டும்;

○ 10-9-84 பூவரசங்குளத்தருகே ராணுவக்காரர்களால், கொழும்பிலிருந்து வந்த பஸ்ஸொன்று மறிக்கப்பட்டு தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டதன் நினைவாக.

JAFFNA.

## சடங்குகள் நீத்த தகனங்கள்

கடற்கரையில் அனாதரவாகக் கிடக்கிறது, ஓர் பிணம்.
வந்து வந்து மோதும் அலைகளின் சளார் வீச்சில் உருளும் அது
மீன்கள் அரித்து, ஊதிப்பருத்து, உருக்குலைந்து
வெகு கோரமாய் காட்சியளிக்கும் அந்தப் பிண்டம்.

ஒரு கிழமைக்குமுன் ஓர் இளைஞனின் ஜீவக்கொழுந்து.
இப்போ நூர்ந்து தண்ணீரில் சிதம்பிய திரித்துண்டு.
வந்து வந்து குளிப்பாட்டும் அலைகளைத் தவிர
அதற்குச் சடங்குகள் செய்ய யாருமில்லை.
தனித்துக் கிடக்கிறது சடலம்.
மீண்டும் சளார் என்னும் ஓசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஓர் இளைஞன் அதனருகே வருகிறான்.
அவனைத் தொடர்ந்து இன்னும் பலர்.
வந்தவர்கள் அந்தப் பிணத்தைக் காவிக்கொண்டு போய்
கடற்கரையின் ஓர் ஒதுக்கிடத்தில் கிடத்த,
சனம் கூடுகிறது.
இதுவரை அப்பிணத்தை எட்டிப் பார்க்காத சனம்
இப்போ அதனருகே கூடுகின்றனர்.
இளைஞன் பிணத்தருகே நின்று பேசுகிறான்.

அன்புக்குரிய என் தாய்மாரே, சகோதரரே,
உங்களில் ஒருவன் செத்தால்தான் அது சாவா?
உங்கள் சொந்தக்காரர் யாராவது இறந்தால்தான்
நீங்கள் கூடியழுது சடங்குகள் செய்வீரோ?
இந்த மண்ணில் வாழும் எவரும் எங்கள்
சொந்தம் என்று நினைக்க மாட்டீர்களா?
எங்கள் இரத்தம் என்று எண்ணமாட்டீர்களா?
இன்று இதோ எங்கள்முன் செத்துக் கிடக்கும்
இந்த இளைஞனின் தாய் உங்களில் இருந்து
வேறானவளாக இருக்க முடியுமா?
அவள் இப்போ எங்கோ ஒரு குடிசையில்,
தன்மகன் சுகமாய் இருக்கிறான் என்ற எண்ணத்தோடு
அரிசி புடைத்துக்கொண்டோ அல்லது
அரைவயிற்றுச் சோற்றுக்காய் சம்பல் அரைத்துக்
கொண்டோ இருக்கலாம்.

அவளைப்போல் இன்னும் எத்தனை எத்தனையோ பேர்
தமது பிள்ளைகள் எங்கெல்லாமோ
சுகமாக இருக்கிறார்கள் என்ற நினைவில்
வாழ்க்கைப் பிரச்சினைகளோடு புகைந்துகொண்டிருக்க
அவர்கள் நினைவுக்கு மாறாய் அவர்கள் பிள்ளைகள்
ரோட்டிலும் காட்டிலும் வயலிலும் கடலிலும்
கொலையுண்டு, ரத்தம் கக்கி செத்துக் கொண்டிருக்கிறார்கள்.
நாமோ இந்நிலையில் –
இன்னும் இவற்றில் பங்கெடுக்காது பதுங்கியிருக்கிறோம் –
இது பாதகமில்லையா?
சமூகத் துரோகமில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் முன்னர் மீன்பிடிக்க பாயிழுத்த கடலும்
குடலை இழுத்துச் சப்பிய நெல்வயல்களும்
கம்பி வளையங்களை கருக்குமட்டையால் தள்ளிக் கொண்
டோடிய தெருக்களும்
இப்போ அபாயம் தரும் அந்நிய பிரதேசங்கள்.
எங்கள் தலைகளிலும் இந்த அவலம்,
எந்நேரமும் இறங்கலாம் என்னும் இவ்வேளையில்
இங்கே கிடக்கும் இவ்வுடல்,
உங்களில் இருந்து பிரிந்து கிடக்கலாமோ?......
இந்தப் பிரிவு ஏன்?
இந்தப் பிரிவு எதிரி நுழையும் விரிசலாய் மாறுமுன் நீங்களும்
எம்முடன் வாருங்கள்.
இந்த இளைஞன் பேசிக்கொண்டிருந்தபோது
அங்கோர் கிழவியின் கன்னங்களில் கண்ணீர் வழிகிறது.
மேற்கே மறையும் மாலைச் சூரியன் –
அவன் கொள்ளி செருகியதுபோல்
அந்தச் சடலத்தைச் சுற்றி தகனத்தீ எழுகிறது.

2

எங்கள் ஊரில் ஒருவன் இறந்தால்
உறவினருக்கு ஆள் அனுப்பி
குடிமக்களைக் கூப்பிட்டு
பறை முழங்க,
ஒப்புக்கழுது,
பாடைகட்டி,
சுடலைக்குக் காவிச்சென்று
வாய்க்கரிசி போட்டு,
கொள்ளி வைத்து – இத்தியாதி இத்தியாதி
சடங்குகளிடையே தகனம் செய்யப்பட்ட உடல்கள்
இன்று –
ரோட்டிலும் காட்டிலும்
வயலிலும் கடற்கரையிலும்
எந்தவித சடங்குகளுமற்று
ரயர்களைப் போட்டு தகனம் செய்யப்படும் காட்சி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் நீத்த தகனங்கள்.
ஆனல் வாழ்க்கை?
இத்தனைக்குள்ளும் பாதிப்புறுது
இன்னும் இன்னும் ஒதுங்கிய நிலையில்
வயிற்றுப் பிரச்சினை என்னும் ஒருசாண் வட்டத்துள்
மக்கள் சுமக்கும் இன்னோர் சடங்கு -
வாழ்க்கைச் சடங்கு.
இதன் அடுத்த நீடிப்பில்
விடுதலையும் ஓர் சடங்காய் வீழும் அபாயம் -
துவக்கைக் தூக்கும் விடுதலைச் சடங்கு.

எங்கோ பிழைத்த ஒன்று என் பற்களிடையே புகுந்து
துருத்திக்கொண்டு நிற்பதுபோல் அராவும்.
மக்களை வெறுமனே பார்க்கவைத்த இயக்கமும்
இயக்கத்தைப் பார்த்து நின்ற மக்களும்.
இந்த இடைவெளிப் பாலையில்
உயிர்ப்பனவெல்லாம் சடங்குகளாய் கருகி விழும்.
இந்த வெறுமை அகல இயக்கத்தைச் சூழ்ந்து ஜ்வாலிக்கும்
வெகுஜன எழுச்சி என்னும் பாறைவெடி அதிரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்சி மூலம்

கொம்றேட்,
கடவுளோடு கதைக்கலாம் வாரும்
புரட்சிக்கு அடுக்குப் பண்ணும் ஓயாத வேலை உனக்கு.
அதனால் கடவுளைப்பற்றி அக்கறைப்பட உனக்கு நேரமில்லை
அதனால் கடவுள் உனக்கு
ஊமையாய் இருக்கிறார் இல்லையா?
சந்தைஇரைச்சலில் சங்கீதம் கேட்பதில்லை
ஆனால் இனிமேல் கடவுளோடு கொஞ்சம்
கதைக்கலாம் வாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு சாப்பாடுமுடிந்து சற்றுச் சாய்ந்திருக்கப்போகிறீரா?
நல்லது.
அப்போ இப்படிக் கொஞ்சம் கணக்கெடுத்துப் பாரும்
இன்றைக்கு நான் எவ்வளவு தூரம்
வீண்பெருமையில்லாமல்,
அடுத்தவனை அனுவசியமாகத் தூற்றுமல்,
கட்சியின் பெயரில் என் சொந்த வயிற்றெரிச்சலை
பிறரில் வஞ்சம் தீர்க்காமல்,
பொய்யின்றி, களவின்றி, போலி நடிப்பின்றி,
பதவி அந்தஸ்துக்களால் உலைக்கப்படாமல்,
உண்மை விடுதலைக்கு, பொதுமைக்கு விட்டுக்கொடுப்பவனுய்
நடந்திருக்கிறேன் என்று
உனது மனச்சாட்சியைக் கேளும்.

மனச்சாட்சியின் நிமிர்வுதான் கடவுளின்
ஆரம்பச் செருமல்
உனது கேள்வியால் உனது மனம் சுருங்குகிறதா?
சுருங்கினுல் அது கடவுளைச் சந்திக்க விரும்பாத
உனது தனிநலக் குணத்தின் சுருக்கம்
தொடர்ந்து நாளும் இப்படிக் கேளும்
மனதின் சுருக்கம் குறையக் குறைய
கடவுளின் குரல் நெருங்கிக் கொண்டே இருக்கும்
ஒருநாள் உனது மனம் எந்தச் சுருக்கமுமற்று
விரியும்போது கடவுள் உன்னேடு
நேரடியாய் உரையாடுவார்.
ஏன், கடைசியில் உன்குரலே கடவுளின் குரலாய் இருக்கும்.
உன் வாயிலிருந்து உதிரும் ஒவ்வொரு சொல்லிலும்
கடவுள் இறங்கி துப்பாக்கி ஏந்தி நடந்து கொண்டிருப்பார்.
அப்போ நீ எங்கு சென்ருலும், எங்கு வாழ்ந்தாலும்
எல்லாவித தர்மப் புரட்சியினதும் மூலமாய்
வாழும் கெரில்லாப் பாசறையாய் இருப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு

தம்நாட்டு விடுதலைக்காகப் போராடும் இளைஞர் இருவர் ஒன்ருக வேலைசெய்துவிட்டு பிரிந்து செல்லும்போது கதைத்துக் கொள்கின்றனர்.

"நான் வீட்ட போறன்" என்ருன் ஒருவன்.

"ஏன், இங்கயே தங்கலாமே" என்ருன் மற்றவன்.

"இல்லை, வீடுமாதிரி சரிவராது. கொஞ்சநேரமாவது வீட்டபோய் நிம்மதியாய் இருக்கவேணும் மாதிரி இருக்கு"

"இங்க உனக்கு எல்லா வசதியும் இருக்கு. வீணு உடம்பை அலட்டாமல் இங்கயே தங்கு."

"இங்க உன்ர வீட்டில எல்லா வசதியும் இருக்கு. உண்மை. அந்த வசதிகள் என்ர வீட்டில இல்லைத்தான். என்ர வீடு ஒரு கொட்டில் வீடு. எண்டாலும் அங்க எனக்கு கொஞ்சம் free ஆக இருக்கலாம் போல படுகுது."

"அப்பிடியெண்டால் சரி... போயிற்று வா"

o o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடென்று அவன் கருதியது எதை?

வீட்டுக்கு வந்த அவன் தன் கால்களை உறுத்திய
சப்பாத்துக்களை கழற்றி மூலையில் வீசினன்.

உடுப்புகளைக் களைந்தான்

அரையை உறுத்திய பென்டரை கழற்றி வீசினன்.

நாலுமுழத்துண்டைக் கட்டிக்கொண்டு
மேலைக் கழுவித் துடைத்துவிட்டு
''அப்பாடா'' என்று ஈசிசெயரில் வந்து
தொப்பென்று விழுந்தான்.

என்ன நிம்மதி.
அவன் மனைவி அவனுக்கு கோப்பி தயாரித்துக் கொண்டி
ருத்தாள்.
அவனது இரண்டு குழந்தைகளும் அவனைச் சுற்றிவந்து
ஏதேதோ மிழற்றிய வண்ணம் இருந்தன.

ஆனல் இவற்ருல் அவன் நிம்மதி கெடவில்லை.

அவன் சப்பாத்துக்களையும் உடைகளையும் களைந்தெறிந்த
போதே தான்
வெளியாருக்கும் வெளியுலகப் பழக்கவழக்கங்களுக்குமாய்
போட்டிருந்த
வேஷங்களைக் களைந்தெறிந்தான்

சந்திப்போருக்கேற்றமாதிரி எத்தனை முகபாவங்கள்,
எத்தனை ஒப்புக்குப் பேசும் கதைகள்.
அத்தனைக்கும் விடைகூறி அவன் அங்கே அப்பாடா என்று
இருந்தான்.

தான் தானக இருந்தான்.

அப்போ வீடென்பது என்ன?

எல்லாத் தேவையற்ற புறப்பிடிகளிலிருந்தும் விடுதலை பெற்று
தான் தானக

இருத்தல், இன்புறுதல். அப்படியா?

வீடென்பது விடுதலை. சரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

அப்படியானால் ஓர் இனம் அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்போது

அது தான்தானாக இருக்க முடியுமா?

அந்த அடிமைப்பட்ட இனத்துள் வாழும் ஒரு தனிமனிதனும் அந்தநிலையில்

தான் தானாக இருக்க முடியுமா?

அப்படியானால் அடிமைத்தனத்திலிருந்தும் பல்வேறு ஆக்கிரமிப்புகளிலிருந்தும்

ஓர் இனம், ஒரு தனிமனிதன் விடுதலை பெறுவதென்பது எவ்வளவு அவசியம்.

அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

o o o

சிறிதுநேரம் ஓய்வெடுத்திருந்த அவனது ஓய்வும் நிம்மதியும் திடீரெனக் கலைக்கப்படுகின்றன.

இத்தனைநேரமும் பதுங்கியிருந்த அரக்கர்கள் போல், எங்கோ தொலைவில்

ஊமை முனகல்களாய் கிடந்த எண்ணங்கள் அவனை மொய்த்துக் குதற ஆரம்பித்துவிட்டன.

நாளைக்குப் பார்க்கவேண்டிய, தம் இயக்கம் சம்பந்தப்பட்ட அவசர வேலைகள் -

சந்திக்கவேண்டிய முக்கிய நபர்கள் -

இன்று அவனைக் கழுத்தறுத்த ஒரு நண்பன் -

அவனைப் பழிவாங்க வேண்டுமென்ற ஓர் அர்த்தமற்ற மன உளைச்சல் -

பிள்ளைப் பேற்றுக்காய்க் காத்திருக்கும் அவன் மனைவி -

அதற்குத் தேவைப்படும் பணப்பிரச்சினை –

அவனை மதிக்காத அயல்வீட்டுப் புதுப்பணக்காரர் -

''நான் போராட்டத்தில் இறந்துவிட்டால் என் பெண்டாட்டி, பிள்ளைகளின் பாடு''

PUBLIC LIBRARY
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தேவையற்ற, எத்தனைதான் சொல்லி அடக்கினாலும்
இடைக்கிடை தூண்டில்போடும் அந்த எண்ணம் -
அப்படி ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள்.
அவற்றின் ஒருங்கிணைந்த அதிரடித் தாக்குதலில் இவன் நிலைகுலைவு.
"அப்பாடா" என அவன் ஈசிச்செயரில் சாய்ந்தபோது
இருந்த அவன் நிம்மதி எங்கே ஓடிற்று?
புறப்பிடிகளிலிருந்து விடுபட்டு அவன் தானாய் இருந்த
தனித்தன்மை எங்கே போயிற்று?
மீண்டும் அவனது தோற்றமும் முகபாவமும் அவனிடம் எழுந்த
எண்ணங்களுக்கேற்றவாறு மாறிக் கொண்டிருந்தன.
திடீரென அவன் ஈசிச்செயரை விட்டு எழுந்தான்,
கைகளை ஒன்றோடொன்று கோர்ப்பதும் பிசைவதுமாக உலாத்தினான்.
அவனுக்கோர் அந்தர நிலை.
இந்த நிலையிலிருந்து விடுபடமுடியாதா என்னுமோர் அந்தர நிலை,
அவனது நண்பன் இவனை தனது வீட்டில் தங்கும்படி கேட்டுக்கொண்டும்,
அங்கு தங்காது free ஆக இருக்கும் நிம்மதிதேடி தன்வீட்டுக்கு ஓடோடி வந்தான்.
இப்போ எண்ணங்களின் சுழலில் சிக்குண்ட அவனுக்கு மீண்டும் அதே நிலை.
நிம்மதிதேடி எங்கே ஓடுவான்? எந்த வீட்டுக்கு ஓடுவான்?
இந்நிலையில் அவன் தன் நாட்டைப்பற்றியும் நினைத்துப் பார்த்துக்கொண்டான்.
ஒருநாடு அந்நிய ஆதிக்கத்தை அகற்றி சுதந்திரம் பெற்று விட்டாலும்
அது தான் தானாய் இருந்து சுகம் அனுபவித்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்குள்ளேயிருந்து கிளம்பும் சமூக, பொருளாதார,
அரசியல்
போட்டிகளெல்லாம் அமைதியுற மார்க்கங்கள் காண
வேண்டும்.
இல்லாவிட்டால்
எனது நாட்டுநிலையும் என்நிலை மாதிரித்தான் ஆகிவிடும்.
நான் இப்போ எங்கே ஓடுவேன்?
இனி எந்தப் புறவீட்டுக்குப் போயும்
நிம்மதி ஏற்படாது என்பதை நான் அறிவேன்.
எனக்குள்ளேயே எங்காவது அப்படி ஒருவீடு இருக்குமானல்
நான் புகுந்துகொள்வேன்போல் பட்டது.
எனக்குள்ளேயே அப்படி ஒரு வீடு இருக்கிறதா?
எண்ணங்களால் உலைவுற்ற அவன், களைத்துப்போய் மீண்டும்
ஈசிச்செயரில் வந்து தொப்பென்று விழுகிருன்.
இப்போ விழும்போது அவனுக்கு விரக்தி இருக்கவில்லை.
அவனுக்கு முன்னைய அனுபவங்கள் உண்டு.
இப்படியான மனநெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம்
அவன் ஒருதுளி எண்ணம்கூட மனதில் குந்தவிடாமல்
துரத்திக்கொண்டு
கண்களை இறுக மூடிக்கொண்டு முழுப்பிரக்ஞையோடு
தூங்க முயன்றிருக்கிருன்.
அப்போதெல்லாம் அவனைக் கௌவிக் கொள்ளும் நிலை என்ன
இவன் கண்ணெதிரே ஓர் மஞ்சள் ஒளிப்பந்து முன்னும்
பின்னும் சுழல்வதும்
திடீரென பெருத்து அவன் முகத்தை ஒளியால் குளிப்
பாட்டுவதும்
இருட்டேற்றுவதுமாய் திரை கிழிவதற்கான சமிக்ஞைகள்:
இப்போதும் அவன் கண்களை மூடிக்கொண்டு ஈசிச்செயரில்
கிடக்கிருன்.
அவனது அந்தரநிலை மெல்லமெல்ல அழிந்து போகிறது.

o ● o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பனித் தூவல் போன்ற பேர்வெளி.
ஈசிச்செயரில் கிடந்தவன் அப்படியே இருக்க
அவனில் இருந்து இன்னோர் உருவம்
அந்த வெட்டவெளியில் போய் நிற்கிறது.
"உனக்குள்ளே வீடு இருக்கிறது."
எங்கிருந்தோ கணீரென்ற அசரீரி.
அவன் மரியாதை கொடுக்கும் தலைமையாசிரியரின் குரலின் தொனிப்பு.
அத்தொனி அவனுக்குள்ளேயா வெளியேயா என்று இனம் பிரித்தறிய முடியாத
ஓர் எல்லைக் கோட்டில் போய் அழிகிறது.
வெளியில் நிற்கும் உருவம் தியான உருவில் அமர்கிறது
அதைப் பார்த்துக்கொண்டு இன்னோர் பிரக்ஞை மிதப்பது போன்ற உணர்வு.
தியானத்தில் அமர்ந்த உடல், விரிந்து விரிந்து பிரபஞ்சம் என்னும்
பேர்குடைக் கவிப்போடு ஒன்றுவது போன்ற ஓர் எண்ணச் சித்திரம்.
அந்த நிலையிலும் அவன் நிம்மதி கெடுத்த எண்ணங்களின் மழுங்கிய திவலைகள்.
வெள்ளித்திரை ஒளியில் ரோச்லைட் பாய்ச்சும் சிறுநீர்
ஒளிப்பனுக்கல்கள்போல் அவை, சக்தி கெட்டு வீழ்கின்றன.
ஆனால் அவைகூட ஓர்சில விநாடிகளே.
பின்னர் உடல் பற்றிய பிரக்ஞை தானாய் மெல்ல மெல்ல அழிவதுபோல்......
பேர்வெளி......
ஆனால் திடீரென எங்கிருந்தோ தோன்றிய பீதியின் ஊமை உராய்வு.
அப்படியானால் இன்னும் வியவகாரப் பிரதேசங்களின் மனறப்பருக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அவன் மயிர்க்கால்களில் ஒட்டிக்கொண்டுதான் இருக்கின்றனா?
அவன் பொருட்படுத்தவில்லை.
மீண்டும் அதே தனித்த பேர்வெளி.
அங்கே அதன் மையநிலையாக,
அசையாது சுடர்ந்து கொண்டிருக்கும்
துளிப்பிரக்ஞை -
அது துளியாக அல்லது முழு வெளியுமே அதுதானு?
அந்தத் துளி அவன் சுயப்பிரக்ஞை.
அந்தத் துளிப்பிரக்ஞையே அந்தப் பேர்வெளிக் கவிப்பாக
விரிவதும் ஒடுங்குவதுமாக இன்ஞேர் கோணத்தில்
மின்வெட்டி மறைகிறது.
பின்னர் அது விரிந்து விரிந்து திடீரென உந்தியின் கீழிருந்து
''ஹோ''வென பிரவகித்து மேலெழும் பேரோசையாய்
நிறகிறது.
உடல் எங்கும் பொன்தாரை வழிவது போன்ற இன்ஊற்று.
அதுதான் அவன்?
அதுதான் அவன் தேடிய அமைதி? சுகம்? ஆனந்தம்?
அதுதான் அவன் தேடிய வீடு?
காலம், இடம், அடுத்தவர் என்பவையெல்லாம் முற்ருக
அழியாவிட்டாலும்,
அவற்றையெல்லாம் உள்ளிழுத்த சுகமான நிலை...
இன்னும் அதற்குள் ஆழ ஆழ நுழையலாம் போன்ற புரிதல்
ஆனல் அவனல் அப்போதைக்கு முடியவில்லை.
நெற்றி ஒற்றை விழியின் விகசிப்பே, அது ஒன்றே.

o o o

''என்னப்பா எழும்புங்கோ''—
மனைவி அவனைத் தட்டி எழுப்புகிருள்.
உடனே அவன் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்துவிடவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எழும்புங்கோ, எழும்புங்கோ'' என்று அவள் பல தடவை அவனை உலுக்கிய பின்னர் மெல்ல அசைந்து பின்னர் அவக்கென எழுந்தான். தூக்கத்தின் சோம்பல் இருக்கவில்லை, மாறாக புதிய உற்சாகம்.

''என்னப்பா ஏழுமணியுமாகேல்ல, அதுக்குள்ளே தூக்கம்?... கோப்பியைக் குடியுங்கோ''

''தூக்கமா? நான் எங்கே தூங்கினேன்?''

அவன் தான் அனுபவித்த சுகத்தின்

பிடியிலிருந்து விடுபடாத நிலையிலேயே சொன்னான்.

''நீங்க தூங்கேல்ல, சும்மா கண்ணை மூடிக் கொண்டு கிடந்தேங்களாக்கும். அதுதான் இவ்வளவு நேரம் உலுக்கியும் நீங்க எழும்பேல்ல'' மனைவி கிண்டலாகக் கதைத்தாள்

''நான் தூங்கேல்லயப்பா, வீட்டுக்குப் போய் வந்தேன்''—

அவன் அவளது கிண்டலைப் பொருட்படுத்தாது கூறினான்.

''வீட்டுக்கா? உங்களுக்கென்ன, திடீரென்டு பைத்தியமா புடிச்சுற்று அல்லாட்டி வாற வழியில ஏதும் தொட்டிட்டுதா?'' அவள் தொடர்ந்து கிண்டலாகவே கதைத்தாள்.

அவன் அவள் கிண்டலை மீண்டும் பொருட்படுத்தாது ''நான் இதை உனக்காக சொல்லேல்ல, எனக்காகச் சொல்லிறன். என்ர அனுபவத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளிறதுக்காக சொல்லிறன்'' என்று கூறி விட்டு அவன் தொடர்ந்தான்.

அவள் அவனை அறிவாள். ஒருவித புன்முறுவலோடு அவனைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அவன் சொன்னான்.

''எல்லாருக்கேயும் வீடு இருக்கு. அதுதான் உண்மையான வீடு. அங்கே போகக் கிடைத்தால் அதைவிடப் பாக்கியம் இல்லை. அதைத்தான் அந்தக்காலத்து ரிஷிகள்,

''வீடுபேறு எய்தல்'' என்றார்களாக்கும். அதாவது ''விடுதலை பெறுதல்'' என்பதன் நீட்சிதான் வீடுபேறு எய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையா?'' என்று கூறியவன் அவளைப் பார்த்துவிட்டு ''நாம் வசிக்கும் இடத்துக்கு ''வீடு'' எண்டு சொன்னூர்களே அதாவது ''விடுதலை'' எண்டு சொன்னூர்களே அந்தக் காலத்துப் பெரியவர்கள், அதன் ஆழந்தான் என்ன, நினைச்சே பார்க்க முடியாது''என்று கூறிவிட்டு முடித்தான்.

அவளுக்கு இவைகள் விளங்காமல் இல்லை. ஆனுல் விளங்கிக் கொள்ளாதது போல் ஒரு பாவனை. அவளுக்குள்ளே பயம். அதை அவன் அறிவான். அவன் இயக்க வேலைகளுக்காக அவளிடம் விடைபெறும் போது கூட இல்லாத பயம் இந்த விஷயங்களை அவன் கதைக்கும் போது அவளுக்கு வந்துவிடும். தன்னையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு எங்காவது கோயில் குளம் என்று ஓடிவிடுவானே என்ற பழைய காலத்துச் சாமியார்களோடு பழக்கப்பட்ட பயம். அவன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

அவள் அதை ஒன்றையும் பொருட்படுத்தாததுபோல் அங்கிருந்து அகன்ருள். அவள் போவதைப் பார்த்துவிட்டு, ''அவள் யார்? என் சிற்றின்ப வீடு, இல்லை, என் சிற்றின்ப விடுதலை'' என்று பகிடியாக தனக்குள் சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தான்.

o o o

முன்னர் அவனுக்கு அதிக அர்த்தம் விளங்காத காலத்தில் அவனது அப்பா, விழிப்பு, கனவு, ஆழ்துயில் அறிதுயில் பற்றிக் கூறியது இப்போ அவனுக்கு நினைவு வருகிறது. அறிதுயில் ஞானிகளுக்கு உரியது. ஆழ்துயில் எம்போன்ற எல்லா சாதாரண மக்களுக்கும் உரியது. இந்த ஆழ்துயில் நேரத்தில் தான் எல்லா ஜீவராசிகளும் தத்தம் வீட்டை அடைகின்றன. விடுதலை உணர்வை சுகித்து வருகின்றன. அதனுல் தான் அடுத்தநாள் அவர்களால் உற்சாகமாகத் தம் வாழ்க்கையைத் தொடர முடிகிறது. இல்லையேல் ஒரே ஸ்தம்பிதம், விரக்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒவ்வொருவரும் ஞானி போல் அறிதுயிலுக்குள் இறங்கி வாழ்க்கையை வாழத்தொடங்கினால்? அதன் பரிமாணத்தை அவனால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

o o o

அவன் தான் முன்னர் டயறிக் குறிப்பாக எழுதி வைத்தவற்றை நினைத்துப்பார்த்துக் கொள்கிறான்;-

முன் ஒரு காலம்-
நம் நாட்டின் விடுதலை நமக்கொரு கனவு.
போராட்டம் என்று தேர்தலில் பொழிந்து
பாராளுமன்றக் கதிரையில், பதவியில்
குந்தியிருந்து கொட்டாவிவிட்டு
கலைந்தது எங்கள் விடுதலைக் கனவு.
அது கனவான்கள் கண்ட கனவு விடுதலை.

பின்னொரு காலம்
நாங்கள் விழித்தோம்
விடுதலையும் கூடவே விழித்துக் கொண்டது.
இது விழிப்பில் விடுதலை.
வேஷம் கலைந்தது
கோழமை ஓட்டுள் தலையைப் பதுக்கினோர்
வீரரானார்.
விழிப்பில் செயலில் எதிலும் விடுதலை.

விழிப்பில் நிகழும் எங்கள் விடுதலை
எமது ஆழ் அகவீட்டில் வேர் விட்டெழுமா?
அல்லது சுலோகப் பூச்சட்டியில் வேர்விடும் செடியா?
எது எமக்குத் தேவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையே வாழ்க்கை
விடுதலையே இருப்பு
விடுதலையே சுகம்
விடுதலையே வீடு.
நாம் வீட்டில் வாழ்வோம்
நாடும் வீட்டில் வாழ்க
நாடும் வீடும் விடுதலையில் சங்கமம்
நாடழிந்து வீடில்லை
வீடழிந்து நாடில்லை
வீடுவரை நாடெழுக
இடைத்தரிப்பு எதுவுமில்லை
சுலோகங்கள் நியாயங்கள்
விடுதலையைக் காவுகின்ற
பூச்சட்டிப் பாத்திரங்கள்
எதுவுமே தேவையில்லை
நாடெல்லாம் வீடெய்துக
எல்லோரும் வீடுறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத்தோப்பு

ஆறுவாரம் அடித்த உக்ர நோய்.
அதன் குரூர ஆக்கிரமிப்பில் இருந்து
மெல்ல மெல்ல விடுதலை பெற்றுக்கொண்டிருக்கும் நான்.
படுக்கையில் கிடந்தபடியே, ஜன்னலைத் திறந்து
வெளியே பார்க்கிறேன்.
உலகம் இன்பப் பெருக்குள் மூழ்கிக் கொண்டிருக்கின்ற
ஆரவாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை விழித்தெழுந்த என் பிள்ளைகள்
முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.
சற்றுமுன்னர் பெய்த மழையில், காலை வெயில் பட்டு
புன்னகைத் துளிகளைச் சிந்திக் கொண்டிருக்கிறது.
மாமரத்தில் பச்சையோடு பச்சையாய்
ஊஞ்சலாடும் கிளிகள்
நவநவ ஓசை ஜாலங்கள், சூரிய வர்ணங்களில் கலவையிட
புது நாதரூப படிம உயிர்ப்பு.
உலகம் இன்பப்பெருக்குள் மூழ்கி, மூழ்கி
எழுந்து கொண்டிருந்தது.
சந்தேகமில்லை.

அற்ப பொருட்களிலும் ஆனந்தம் பரிமாணமுறும் காட்சி
ஓர் ஆச்சரியம்.
நான் முன்னர் கண்டலுத்த காட்சி எல்லாம்
திடீரென இன்பூட்டும் மின் விழுதுகளாய்
என்னுள் இறங்கின.
காரணம்-
ஆறுவாரம் வீசிய நோயின் உக்கிரத்தில்
எனது இறுகிய சங்கிலியன் தோப்பில்
பலமரங்கள் சாய்ந்தன.
என் மூதாதையர் வழிவந்த புராதன சின்னங்கள் என
நான் போற்றிய
என்னகத்தின் இருண்ட பகுதியில் மரங்கள் சாய்ந்தன.
என்னில் வெயில் விழாது மறைத்த இருண்டபகுதி
இப்போ மரங்கள் பாறிய ஜன்னல்களினூடே
கதிரவன் ஏந்திய கற்பூர ஒளி

என்முட்டு நீங்கிற்று.
மூச்சிலோர் லயம்.
இருப்பிலோர் இதம்.
கூனலைவிட்டு நிமிர்ந்து நின்றேன்.
எங்கும் எதிலும் உள்ளும் வெளியும் இன்பப் பூசனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருப்பின் அதிகரிப்பு

வரையறுக்கப்பட்ட என் வாழ்க்கை வட்டத்துள்
உன்னைத் திருப்திப்படுத்தலே என் லட்சியம்.
விலைகள் விஷக்கடுப்பாய் ஏற ஏற
அத்தியாவசியங்கள் எல்லாம் அந்நியமான சூழ்நிலையில் –
உன் திருப்தியில் என் நெருக்கம்.
கேள்வி–நிரம்பல் பொருளாதாரத்தில்
வயிறு நிரம்பவில்லை,
எம் தேவைகள் நிறைவுறவில்லை,
நிரம்பியதெல்லாம் வறுமையே.

ஷோறூம்களில் இருக்கும் பொருட்கள்-
அவைமுன்னே விழியேந்தும் பிச்சைக்காரரென நாம் நிற்க,
காரில் வரும் கனவான்களோடு அவை
கைகோத்துக் கொண்டோடும் விபச்சாரம்.
இந்த வியாபார இரைச்சலில் நாம் எதிர்நீச்சலிடும்போதும்
நம் ஆழ நம்பிக்கைகள் இன்னும் இன்னும்
எதிர்காலம் கண்டு இறுகும்.

நாம் ஜனநாயக வாதிகள்.
நம் ஜனநாயகப் பொருளாதாரம்
எல்லோரும் பங்கெடுக்கும் திறந்தவெளி விளையாட்டரங்கு,
ஏற்றுமதி இறக்குமதி எவரும் பங்கெடுக்கலாம்.
எதையும் வாங்கலாம், விற்கலாம்.
இங்கு எல்லாம் உண்டு. எல்லாம் தாராளம்.
ஆனல் ஒன்று-
எல்லாம் தரும் பொருளாதாரம்
எமக்கு பணத்தை மட்டும் தருவதாய் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வாழ்க்கை வட்டத்துள்
நாம் உழைத்து உழைத்து ஓடாய்ப் போக
காசுமட்டும் நம் பிடிக்குள் அடங்காது
வீங்கி வீங்கி மேலே போகிறதே.
பணம் வீங்க வீங்க,
பொருட்களின் விலைகளும் போட்டி போட்டுக்கொண்டு
ஏறி ஏறி அதன் மூக்கின் நுனியில் குந்த
மூக்கை நாக்கால் தொடமுயலும் வாழ்க்கை
நாக்குலைந்து சாக்கலை தொட நாம்
வாழும் இவ்வேளையிலும்
நம் இருப்பு அதிகரித்து,
ஒருமையுறுகின்றோம்.

பொருள்விலையையும் பணவீக்கத்தையும்
குறைக்க முடியாதவர்கள் ஜனநாயகம் என்கிறார்கள்.
தன்நிறைவு என்கிறார்கள்.
இந்த ஜனநாயகத்துள்ளும் தன்நிறைவுள்ளும்
எத்தனை இளம் ஜோடிகள் தற்கொலை,
எத்தனை விவாகப் பிளவுகள்,
எத்தனை மனமுறிவுகள், பிரிவுகள், துயரங்கள் -
அத்தனை கர்மங்களையும் தன் தலையில்
கட்டிக்கொள்ளும் இந்த ஜனநாயகம்,
எமது இருவரின் இருப்பின் அதிகரிப்புக்கும்
ஒருமையின் உக்கிரத்துக்கும் காரணமாய் இருப்பதால் -
அது தன் கர்மத்தைத் தணித்துக் கொள்கிறதோ?
ஆனால் ஒன்று.
இந்த அமைப்பே, பிரியா எம்முறவின் உரைகல்.
நாங்களே இந்த அமைப்பை பிளந்தெறியப்போகும் திரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையும் புதிய எல்லைகளும்

எல்லையின்மையே உண்மையின் லீலை
எல்லை நாட்டுதல் மனிதனின் மாயை
ஒவ்வொரு எல்லை நாட்டலும்
எல்லையின்மையின் மையம்.
ஒவ்வொரு எல்லைக் கல் தரிப்பிலும்
எல்லையின்மையின் வியாபிப்பு.
அதோ அதோ நீரென
கானலை நம்பி ஓடும் மான்கள்
இதோ இதோ எல்லையென
உண்மையின் பின்னோடும் நாங்கள்.
ஒவ்வொரு மனித எல்லைப் புள்ளிகளும்
எல்லையற்ற பிரக்ஞை விழிப்பின்
நெற்றிக் கண்ணே.

o o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இருப்பில் விரியும் எல்லையின்மை
இயக்கத்தில் எல்லைகள் நாட்டும்
வீட்டெல்லை
கிராம எல்லை
நகர எல்லை
நாட்டெல்லை
ஒவ்வொரு எல்லையும் எல்லையின்மையின் மையம்
என்றால் -
ஒவ்வொரு எல்லையும் விடுதலை
எல்லைகள் என்பன விடுதலை வெளிகள்
வீடு – விடுதலை
நகர விடுதலை
கிராம விடுதலை
நாடு விடுதலை
எல்லையுள் இயங்கி
எல்லையின்மையைக் காண்.
ஒவ்வொரு எல்லையும் ஒவ்வொரு ஒளி
வண்ணம் பூசும் விடுதலை
ஒவ்வொரு தனிக் கலை இயற்றும் விடுதலை
ஒவ்வொரு தனிக் கலாச்சாரம் நிகழ்த்தும் விடுதலை
எல்லைகள் ஆயிரம் எழுந்து மலர்க.

o o o

ஆயிரம் எல்லைகள் நாட்டுக
ஆயிரம் கலாச்சாரங்கள் நிகழ்த்துக
பின்
எல்லையற்ற பிரக்ஞையில் ஏறிக்குந்தி
எங்கும் எல்லாம் தழுவி வா
எங்கும் எல்லாம் தழுவி அணை.


PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலி மாமா

"உன்னுடைய பெயர் என்ன?" என்றேன் நான்.

"என்னுடைய பெயரா? சந்திரவதனி" என்றாள் அவள்.

"சந்திரவதனியா?" நான் இழுத்தேன்.

"ஏன் கூடாதா?" — அவள்.

"இல்லை, அமெரிக்கரும் ரஷ்யரும் போட்டி போட்டுக் கொண்டு கால்மிதிக்கும் இடமா, உன்னுடைய மென்முகம்? இன்னுமா இந்தப் பெயர்களும் கற்பனைகளும்?"

o o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுள் இருந்து பாக்குரல் இடிக்கும்
ஔவைக்கிழவி என்கிற பழைய
புராணக் கௌவல்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.
கிழவி வாழ்ந்த இடங்கள், கதிர்ச்சுழி ஓடிய குழிகளென
செய்மதிப் பதிவுகள் கீழ்வந்து கொண்டிருக்கின்றன.
அம்புலி ஆய்வில் வானக இருட்புலங்கள் ஒளிபெறும் காலம்
கற்பனைக் குகைகளில் தற்கைதியான மனிதன்
புதிய கண்டுபிடிப்புகளில் விடுதலை பெறுகிறான்.
புலிகள் வெளிவந்து, குணங்களை உதறி
சூரிய நமஸ்காரம் செய்கின்றன.
ஆய்வின் முதிர்வில் அண்மிக்கப்பட்ட பார்வைப் பரப்பில்
புதிய நெருங்கிய பார்வைப் பரிமாணம்.
விண்ணகம் மனிதக் கைதடவும் யதார்த்தம்.
இராமனின் விரல் கோடுகள் ஏந்திய அணில்களென
பிரபஞ்சக் கோளங்கள் ஒவ்வொன்றிலும்
மனித அறிவின் எறியங்கள்.

மேலே மேலே போன ஆய்வின் முதிர்ச்சி
கீழே கீழே அவனை நோக்கி வந்தது.
மேலே எறியப்பட்ட ஏவுதணைகள், திடீரென
புவியீர்ப்புள் சிக்குண்டு,
எய்த பூமிக்கே திரும்பி விரைந்தன போல்
புறம்போன ஆய்வுகள்,
எய்தவனிடமே திரும்பி வந்து, அகம் கிழித்து,
புதுக் கேள்விகள் கேட்க வைக்கும், வாலி பிடுங்கிய
ராமபாணங்கள்.
"நீ யார்?"
"மரணத்துக்குப்பின் என்ன?"
வாலி கேட்கிறான்.
"நான் மனிதன்."
"மரணத்துக்குப்பின் ஒன்றுமில்லை."
இராமனை மறைத்து ராவணன் பதில் சொல்கிறான்.
வாலி சிரிக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்துக்குப்பின் ஒன்றுமில்லை.
வெறும் சூனியம்.
அப்படியானல் –
அந்தர வெளியில்,
எல்லாத் தொடர்பு சாதனங்களும் கெட்டுப்போய்,
இலக்கற்று மிதந்து கொண்டிருக்கும்
நான் விட்டெறிந்த திரிசங்கு சொர்க்கம்
போலவா மனிதனும்?
ஓர் விஸ்வாமித்திரக் குரல்.

என்ன தெரிந்தென்ன -
என்ன கண்டுபிடித்தென்ன -
தன்னைப்பற்றித் தனக்கே தெரியாத,
தனக்கேதான் அந்நியமாக மிதக்கும்
ஜந்துவா மனிதன்?
இதுதான் உண்மையா?
உபநிஷதகால நசிகேதன் கேட்கும் புதுக் கேள்விகள்.
மனிதன் சூன்யம்?
இந்தச் சூன்யங்களா அன்பில் இணைகின்றன?
காதலில் கரைகின்றன?
பாசத்தால் பிணைகின்றன?
சூன்யங்களில் இவ்வளவு ஈர்ப்பும் சுவையுமா?
எனக்குள் இருந்து இனிப்பது என்ன?
எனக்குள் இருந்து பெருகும் உணர்வுகளின் எல்லை எங்கே?
நசிகேதன் தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறன்.

அவனுக்கு அவை நேர்த்தியாகவே தெரிந்தன.
எங்கோ ஒரு குழந்தை வீரிட்டழுதால் இவன் நெஞ்சில் ஓர்
இரக்கத்தின் அதிர்வோட்டம்.
களங்கமற்ற பலர் முகங்களில் விளக்கேற்றும்
அன்புத் தூண்டுதலில்
இவன் தன்னிழல் அழிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோட்டில் செல்லும் பிச்சைக்காரனைச்
சூர்ந்து கவனித்து விட்டால்
இவன் அவனாகி விடும் கரைவு
இனந்தெரியாத முகங்களில் ஆடும் தோழமை.
அநியாயம் செய்தவனை அல்லது
வீண்வம்புக்கிழுத்தவனை அடித்து வெருட்டி,
அடக்கிவிட்டு வீடு சேர்ந்தால்,
அந்த அநியாயக்காரனின் முகத்தோற்றத்தில்,
அங்க அசைவில் எங்கோ ஒரு மூலையில் ஒட்டிக்கொண்டு
கிடந்த ஏதோ ஒன்றில்
இவன் தன்னை இனங்கண்டு
அவனுக்காய் உள்நெகிழ்ந்து, நெகிழ்ந்து ஓட விட்ட
துயர்ப்படுகை.
கொக்கொன்றை ஒருவன் வேட்டையாடி
அதை தலைகீழாய்த் தொங்கவிட்டுக்கொண்டு போனபோது
ஊர்ந்து கொண்டிருந்த எறும்பு வரிசை
இவன் கால்களால் சிதையுண்ட போது -
பஸ்ஸால் மோதுண்டு குடல் கக்கிய நாய்
சாகுமுன் போட்ட தீனக்குரலின் போது -
அப்போதெல்லாம் இவனிடம் புகுந்து கொள்ளும்
அவற்றின் உள்நாள சமிக்ஞைகள் -

மனிதன் மனிதனிடம் மட்டுமல்ல, எல்லா உயிர்களிடத்தும்
அன்பு கொள்ள, நேயம் பூணத் தூண்டும் சக்தி என்ன?
அதன் அடிப்படை எது?
ஏன் இந்த உள்தூண்டல்?
எல்லாம் ஒரே உணர்வு வார்ப்புகள்
ஒரே பிரக்ஞைக் கடல்.
அது பெற்றெடுத்த பிள்ளைகளாய் மிதக்கும் உயிர்க் குமிழ்கள்
இந்நிலையில் இங்கே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பும் பிறப்பும் எங்கே வருகின்றன?
யார் பிறக்கிறான்? யார் இறக்கிறான்?
பிறக்க முன்னும் இருக்கிறோம்.
இறந்த பின்னும் வாழ்கிறோம்.
ஒரே இருப்பு.
பிரக்ஞையில் சவாரிவிடும் மனிதன்.
ஐன்ஸ்டீன் சிரிக்கிறார். அவர் போடும் புதுக்கேள்விகள்.

''மரணத்தின் பின் என்ன?''
என்ற கேள்வியின் யதார்த்தப் பாறையில்
குந்தியிருந்த விஞ்ஞானக் கழுகு, தவிர்க்கமுடியாத வகையில்
அகவெளிப் படுகை நோக்கி சிறகடிக்கிறது.
உள்ளுணர்வுக் கோட்டில் அதன் செங்குத்தான விரைவு.
அது அகவெளி நோக்கி விரைய விரைய
அதன் தோற்றம் மாறுகிறது.
அமைதிப் புறா.
இசைக்குயில்.
ஆனந்த மயில்.
அது உள்ளுணர்வுத் தளங்களில் மாறி மாறி அமர்கிறது.
பறவையின் உள்ளொளிச் சொண்டில்
விஞ்ஞானி குந்தியிருக்கிறான்.
நான் யார்?
நான் யார்?
பரிமாணச் சுவர்களில் மோதி மோதி விழும் கேள்வி.
' Quick, said the bird, find them, find them''

யுகமாற்றம் என்பது அகமாற்றமா?
புறச்சூழல் பாறையில் குந்தியிருந்த
விஞ்ஞானக் கழுகின் இடம்
வெற்றிடமாக இருக்கிறது.
முன்னர் கற்பனை மனிதன் கழற்றி வீசிய
கைவிலங்குகள் விஞ்ஞானத் தடங்களில்
கிடந்து அவன் சென்ற திக்கைக் காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விஞ்ஞான மனிதன்
சுழற்றி எறியும் புறச்சூழல் விலங்குகள்
கழுகிருந்த பாறையில் மோதி.
மோதி அதைத் தகர்க்கின்றன.
"மரணவெள்ளி" வெடித்துச் சிதறுகிறது.
பிரபஞ்சத்தைப் போர்த்திருந்த மரணமும் சூன்யமும்
கரைந்து இன்மைப் பொருளாகின்றன.

புறச்சூழல் என்னும் யதார்த்தத்தில் பிணிக்கப்பட்டிருந்த
மனிதன் விடுதலை பெறுகிறான்.
விண்வெளிக்கனுப்பத் தயாரிக்கப்படும்
விண்வெளி வீரர்கள்போல்,
அகவெளிப் பாய்ச்சலுக்குத் தயாராகும் புதிய அணி.
விண்வெளிச் சமிக்ஞைகள் பதியும் antenna க்களாய்,
சூட்சும உலகின் செய்திகள் வாங்கும்
புதுயுக தியான வீரர்கள்.
தியானக் கூடங்களிலிருந்து அடிக்கடி
ஏவுகணைகளின் வெளிக்கிளம்பல்.
தியான வீரர்களின் மூலஇருப்பை மேலிழுத்துக் கொண்டு
மேலே மேலே பாயும் ஏவுகணைகள்.
கீழ்நோக்கி எண்ணல் (COUNTING DOWN)
ஐந்து.
நான்கு.
மூன்று.
இரண்டு.
ஒன்று.
- பாழ்.
மேலே மேலே அந்தரவெளியில் மிதக்கும்
ஆயிரம் இதழ்த் தாமரைத் தங்கு நிலையம்.
அதை நோக்கிய யாத்திரை.
புவியீர்ப்புக்கப்பால் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வகோளங்களினதும் தொடர்பு சாதனங்களாய்
அகநிலையங்களைத் தடவிச் செல்லும் தியானிகள்.
சுழலின் மையம் அவர்கள்.
அவர்களிடமிருந்து பரவிய ஒளிவட்டச் சமிக்ஞைகள்
எங்கும் பரவின.
கீழ் இறங்கின.
இந்நிலத்தின் மண், காற்று, நீர், ஒளி யாவும்
பேரியல்புற்று பேசலுற்றன.

o o o

"உன் பெயர் என்ன?"
'உள்ளொளி வதனி"
"உன் பெயர்?"
"சித்தக் கமலி"
"உன் பெயர்?"
"ஒளிவளர் கோன்"
"உன் பெயர்?"
"அகக் கொழுந்து"
"தொழில்?"
'யார்க்கும் தியானத் தீ கொடுக்கிறேன்"
"அவள்...?"
"சூட்சுமா அவள் பெயர்.
சூட்சும உலகின் செய்திகள் வாங்கும் நிருபர்."
"அவர்?"
"அகப்புற வாழ்க்கை இணைப்பதிகாரி". பெயர் சங்கமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்காத்திகள் - பழையதும் புதியதும்

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?
இத்தனைநாள் அடைகாத்தாய்
ஒன்றையும் நான் காணவில்லை
ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?

நான் இட்ட முட்டைகளா?
நான் பொரித்த குஞ்சுகளா?
நான் இட்ட முட்டைகளை
நாய்களுக்குப் பலிகொடுத்தேன்
நான் பொரித்த குஞ்சுகளை
நரிகளுக்குக் கொலை கொடுத்தேன்

நீ இட்ட முட்டைகளா?
நீ பொரித்த குஞ்சுகளா?
என்ன சொல்கிறாய்!
எனக்கு விபரமாய் சொல்
நீயிருந்த காலத்தில் நான் இல்லை ஆகையினால்
நீ பட்ட பாடுகளை
நான் அறியக் கூறுயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வகதை சொல்லவில்லை
புளித்தகதை அது, அதனுல்
இடையில் நான் முட்டையிட்டு
சீரழிந்த கதை சொல்வேன்.

சரி, எனக்கு விளங்கிற மதிரி
சொல்லு, தாயே.

முன்னர் வயது முதிரா பருவத்தில்
ராணி ஒருத்திக்கு சேவகங்கள் செய்து வந்தேன்...

ஓ, அப்படியா?
சொல்லு தாயே.

சேவகங்கள் செய்கையிலோர்
"சேர்" என்று பேர் பெற்ற
சீமானை நான்கூடி
தேசிய முட்டையிட்டேன் தேசிய முட்டையிட்டேன்.

பிறகு?

தேசிய முட்டை மெல்ல
தேய்வுற்று தேய்வுற்று
தேய்கடையாய் போகையிலே
அன்னுர் வழிவந்த ஐயாவை நான்கூடி
ஐம்பதுக் கைம்பதென்னும்
அழகான முட்டையிட்டேன்.
முட்டையிட்ட வேகத்தில்
மூலம் எரிந்ததனுல்
கொக்கரித்துக் கொக்கரித்துக்
கோமான் குறண்டிவிட்டார்.

அட பாவமே, பிறகு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட முட்டை அடைகாக்க
இயலாமல் நான் அழிந்தேன்
இட்ட முட்டை கூழாக
நாய்களுக்கு எடுத்தெறிந்தேன்
நான் இட்ட முட்டையிது
நான் இட்ட முட்டையிது.

நீயிட்ட முட்டையிதா? பிறகு?

பின்ஞெருக்கால் தொழிலாளர்
பாதையிலே சென்றவரோ
''சமவுரிமை உனக்கென்று
சல்லாபம் செய்ததினுல்
மீண்டும் கருவுற்றேன், மீண்டும் கருவுற்றேன்.
ஆனுல் இடமுன்னர்
அந்த மகானுகளோ
ஆண்டவரைப் போய்ச் சேர்ந்தார்
அந்தரித்து நான் போனேன்.

பிறகு;

அந்தரித்துப் போய் நானும்
தோல் முட்டையாய் ஒன்றை
போட்டடித்தேன், போட்டடித்தேன்
''பொருள் வயிற்'' பிரிந்து
போனவர்கள் மீளவில்லை
நான் இட்ட முட்டையிது, நான் இட்ட முட்டையிது.

நீ இட்ட முட்டையிதா?
இன்னும் சொல்லு தாயே
இன்னும் விபரமாய் சொல்லு.

பின்னர் தவமிருந்து
முதுவயதில் ஆசையுற்று
சமஷ்டி என்ற முட்டையிட்டேன்
தள்ளாத வயதிலேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஷ்டி என்ற முட்டைக்காய்
அடைகாக்க நான்பட்ட ஆய்க்கினைகள் ஒன்ருமோ?

ஏன் தாயே, என்ன நடந்தது?

அகிம்சை என்ருர் முன்னொருவர்
அதைக் கேட்டு நம்மவரும்
அச்சாரம் இல்லாமல் அடைகாக்கச்
சொன்ஞர்கள்.

அச்சாரம் இல்லாமலா?
எனக்கு அது விளங்கேல்ல.

குறுக்கிடாத அப்பனே
எல்லாம் போகப் போக விளங்கும்
காகக் கூட்டினிலே
குயில் முட்டை இட்டதுபோல்
அச்சாரம் இல்லாமல் அடைகாக்கச் சொன்ஞர்கள் .........

பிறகு என்ன நடந்தது?

என்ன நடக்கும்? உங்களுக்குத் தெரியாதா?
காகக்கூட்டினிலே
குயில் முட்டை இட்டு வந்தால்
என்ன நடக்கும்?
குஞ்சு பொரித்து அவைகள்
''கூ கூ'' என்னும்போது
காகங்கள் வந்தனவே
படைபடையாய் வந்தனவே
ஜீப்பிலேயும் ட்றக்கினிலும்
படைபடையாய் வந்தனவே
கழுகுகளும் அவற்ருேடு
சேர்ந்தொன்ருய் வந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ கேட்கவே பயமாய் இருக்கே
பிறகு, பிறகு...

சீ, எப்பவோ முடிந்த காரியத்துக்கு
இப்பவேன் பயப்பிடுற? கேள்—
படை படையாய் வந்தவை என்
பாலர்களைக் குதறினவே
கூட்டமாய் வந்தவை என்
குஞ்சுகளைக் குதறினவே
பூட்ஸ் கால்களால் மிதித்தன
உதைத்தன, நெரித்தன
துவக்குகளால் அடித்தன
மண்டைகள் பிளந்தன.
என் உயிர் மணிகள்
என் குலமணிகள்
சிதைந்து போயின, சின்னாபின்னமாயின
நான் பொரித்த குஞ்சிவைகள்.
நான் பொரித்த குஞ்சிவைகள்.

அக்கிரமம். அக்கிரமம். அநியாயம்.

அக்கிரமமும் இல்லை, அநியாயமும் இல்லை.
அச்சாரம் இல்லாமல் அகிம்சை என்ற எங்களுக்கு
இதுவல்ல, இன்னும் வேணும்.

இதோட அவங்க விட்டுவிட்டாங்களா?

அவங்கள் விடவில்லை, நாங்கள்தான் விட்டுவிட்டோம்.

என்ன, நீங்களா?
என்னத்தை விட்டுவிட்டீர்கள்?

முட்டை இடும் ஆசையை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை இடும் ஆசையையா?
இல்லை நீ பொய் சொல்கிறாய்.
அதுக்குப்பிறகும் நீ முட்டை இட்டுத்தானே இருக்கிறாய்?
தனிநாடு, சுயாட்சி தமிழீழம் இவையெல்லாம்
உன் முட்டைகள் தானே?

இப்பிடி முட்டை இடுவதாக கொக்கரித்தேனேயொழிய
உண்மையாக நான் ஒன்றும் இடவில்லை.
இட்டதெல்லாம் வெறும் கொக்கரிப்புகள்தான்.
வெறும் மொட்டைக் கொக்கரிப்புகள்.

பிறகு?

## 2

ஆக்காத்தியின் பூமியை மீண்டும் அடிமை இருள் கௌவிக் கொள்ள, சங்கிலித் தளையால் கட்டுண்டதுபோல் அதன் தொண்டை இறுகி இறுகி மூச்சு வாங்க, ஒன்பது வாசல் களும் அடைபட்டதுபோல் அது முக்கி முனகி ஈனக்குரல் எழுப்ப, அந்தக்குரல், அடிமை இருளின் ஓரத்தில் ஆதாயம் தேடும் அரசியல் அங்காடிகளின் கூச்சலில் அள்ளுப்பட்டு அழிந்து போகிறது.

லாபம் லாபம் ஐயா வாங்கிப் போங்கள்
நீலக்கட்சி வாங்கிப் போங்கள், எங்கள் ரேட்மார்க்-கை

ஐயா லாபம் லாபம்
யானைக் கட்சி வாங்கிப் போங்கள்

ஐயா மந்திரிப் பதவி வேணுமா?
லாபம் லாபம் இங்கே கிடைக்கும் வாருங்கள்.

ஐயா மாவட்ட சபை வேணுமா,
மலிவு விற்பனை மலிவு விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள்
கிராமோதய தலைமை இங்கே விலை போகுது.
ஓடி வாருங்கள்.

இவற்றுள் ஆக்காத்தியின் குரல், முனகல்:
ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்
ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்.
என்னைக் காப்பாற்ற ஒருவரும் இல்லையா?

ஒருவன் ஓடி வருகிறான்.
கையிலே கத்தி, கத்தியிலே இரத்தம்.
என் பெயர் 77 இனக் கலவரம். 58 என் அப்பன்.

ஆக்காத்தியின் குரல் மீண்டும் கேட்கிறது.
ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்.
ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்.

காகங்களும் கழுகுகளும் பறக்கின்றன.
ஆக்காத்தியைச் சூழ்ந்து கொத்திக் குதறுகின்றன.
ஆக்காத்தியின் அவலக் குரல் ஈனஸ்வரத்தில் கேட்கிறது.
பிறகு நிசப்தம்.

ஆக்காத்தி ஆக்காத்தி
என்ன ஒரு சத்தத்தையும் காணேல்ல.

"............................"

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?

சீ, நிறுத்து
இந்த ஒப்பாரியெல்லாம் இனி வேணும்.

அப்பாடா நீ இன்னும் இருக்கிறாயா?
அப்போ ஏன் பேசாமல் இருக்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசக்கூடிய நிலையிலா இருக்கிறேன்?
தொண்டை இறுகிச் சாகும் நிலையில் பேசமுடியுமா?

அப்போ நான் பாடுகிறேன்
ஆக்காத்தி ஆக்காத்தி

சீ இந்த ஒப்பாரி இனி வேணும்
நான் செத்தாலும் எனக்கு ஒப்பாரி வேணும்.

அப்போ?

எனக்கு புதிய பாடல் தேவை, புதிய யாப்புத் தேவை
அது என் விடுதலைப் பாடல். அது என் விடுதலை யாப்பு.
அதோ உன் ஒப்பாரிக்கு ஏற்றவர்கள் வருகிறார்கள்.

யார் அவர்கள்?

அவர்களைக் கேட்டுப்பார்.

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?

பாராளுமன்றக் கதிரையிலே முட்டையிட்டேன்.

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?

தேர்தல் என்னும் ஏமாற்று
வித்தையிலே முட்டையிட்டேன்.

மாவட்ட மந்திரி
பதவியிலே முட்டையிட்டேன்.

ஆக்காத்தி, யார் இவர்கள்?
இவர்கள் கூறுவதென்ன?
இவர்கள் உன்னவர்களல்லவா?
இவர்களோடு சேர்ந்தல்லவா நீ முட்டையிட்டாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அப்போது.

இப்போ?

இவர்கள் என்னவர்கள் அல்ல
வெறும் அரசியல்அங்காடிகள், கோழைகள்
முன்னர் என்னோடுசேர்ந்து அடை காத்தவர்கள்
இப்போ என்னையே அடைவு வைக்க நிற்கிறார்கள்.

இனி வழி?

திடீரென காதைப்பிளக்கும் ஓசை இடிமாதிரிக் கேட்கிறது.
ஆக்காத்தியின் கை விலங்குகள்
ஓர்கணம் அதிர்ந்து குலுங்குகின்றன.

ஆக்காத்தி, அது என்ன சத்தம்?

அதுவா?
எனது புதிய வழியின் ஒலி.

புதிய வழியின் ஒலியா?
எனக்குப் பயமாய் இருக்கிறது.

நீ சம்பாதித்தது அதுதானே
பயம்தான் உன் முதல்.

நீதானே அதைத் தந்தது?

நான் தரவில்லை
இப்போ நீ கண்ட அவர்கள் தந்தது.
என்னோடு இடையில் வந்த அவர்கள் தந்தது.
எனது மரபு வீரமரபு.

இடையில் வந்தவர்களா?
யார் அவர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இடையில்தான் நிற்கிருர்கள்
காதைக் கொடுத்துக் கேள்
அவர்கள் இரைவது கேட்கும்

எங்கள் வழி அகிம்சை வழி
எங்கள் வழி காந்தி வழி.
எங்கள் மன்றம் பாராளுமன்றம்
எங்கள் அரசு தேர்தல் அரசு......

கேட்குதா?

கேக்குது கேக்குது
உன்னை முட்டை இடவைத்த
உன் பழைய ஆக்கள் தானே இவர்கள்?

அது ஒரு காலம்
இப்போ அவர்கள் வெறும் கழுகள்.

ஏன் அவர்கள் காட்டும் வழி பிழையா?
அகிம்சைவழி பிழையா?
காந்திவழி தவரு?

அது தவறல்ல
இவர்கள் அதைச் சொல்வதுதான் தவறு
இவர்கள் அதைச் சொன்னுல்
காகங்களும் கழுகுகளும் தான்
எம்மைக் கொத்தவரும்.

ஏனே?

நான் முந்திச் சொல்லேல்லையா?
அச்சாரம் இல்லாமல் அடைகாக்கச்
சொன்னவர்கள் இவர்கள்தான்
இரவல் கூட்டில் குயில் முட்டையிடச்
சொன்னவர்களும் இவர்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கண்ட அகிம்சையின் ஆழம் இதுதான்.
அப்ப காகங்களும் கழுகுகளும் தானே வரும்?

திடீர் திடீரென ஆக்காத்தியின் நகரம் எரியூட்டப்படுகிறது.
அதன் நூல்நிலையம் சாம்பராகிறது
56, 58, 77 என்னும் அரக்கனின்
தீ நாக்குகள் ஆக்காத்தியின் சொந்த நகருள்ளும்
புகுந்து சுழல்கின்றன.
இடைக்கிடை வயிற்றை அதிரவைக்கும் இடியோசை.
ஆக்காத்தியின் புதியவழி.
விட்டு விட்டுக் கேட்கும் அதன் ஒழுங்கான அதிர்வு.

மீண்டும் ஒருவன் ஓடி வருகிறான்.
ஒரு கையில் கத்தி, மறுகையில் தீக்கொள்ளி.

என்பெயர் ஜுலை 83.
எனது பாட்டன் 58. எனது அப்பன் 77.
ஆக்காத்தியின் அழுகுரல் தொடர்கிறது.
என்னைக் காப்பாற்ற யாருமில்லையா?
என்னைக் காப்பாற்ற யாருமில்லையா?
காகங்களும் கழுகுகளும் அவளைச் சூழ்ந்து குதறுகின்றன.
அவளைக் காப்பாற்றப் போவதாக
மார்தட்டி அருகில் நின்ற
அகிம்சைவாதிகள் பயந்து நழுவி ஓடுகின்றனர்.
அவர்கள் அரசியல் வியாபாரம் திடீரென நின்று விடுகின்றது.

o o o

காந்தியின் நியான அமர்வு.
அவரது பேராண்மை அமர்வில்
ஜனித்த அகிம்சை தேவி அவர் மடியில்
அமர்ந்திருக்கிறாள்.
அவள் நெஞ்சில் தர்மசக்கரம் சுழல்கிறது.
அகிம்சை தேவியின் தேஜஸ் அப்பிரதேசத்தை அள்ளுகிறது.
அவ்வேளை ஆக்காத்தியைச் சுற்றி நின்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதிதோய அங்கு ஓடிவருகின்றனர்.
அவர்களைத் தொடரும் காகங்களும் கழுகுகளும்.
ஓடிவந்தவர்கள் தம் பீதி அகலாமலேயே
''எங்கள்வழி காந்திவழி
எங்கள்வழி அகிம்சைவழி''
என்று காந்தியைச் சுற்றிச்சுற்றி வலம் வருகின்றனர்.
காகங்களும் கழுகுகளும் நீட்டிய நகங்களுடன்
இவர்களை நெருங்க நெருங்க
இவர்களது பீதிக்கோஷம் உச்சமுறுகிறது.
''எங்கள்வழி அகிம்சைவழி
எங்கள், யுத்தம் அகிம்சை யுத்தம்''
இவர்களது கோஷம்
பரிதாபகரமான நிலையை அடைந்தபோது
திடீரென அகிம்சைதேவி இவர்களிடம் ஒரு துப்பாக்கியை எடுத்து நீட்டி காகங்களையும் கழுகுகளையும் எதிர்க்கும்படி பணிக்கிருள். இவர்கள் நடுங்கிக் கொண்டே துப்பாக்கியைக் கையில் வாங்கி காகங்களையும் கழுகுகளையும் எதிர் கொள்ள காலடி எடுத்து முன்வைக்கின்றனர். ஆனுல் ஒருகணம்தான். அடுத்தகணம் வாங்கிய துப்பாக்கியை தரையில் வீசிவிட்டு நடுங்கிக்கொண்டே தலைதெறிக்க பின் வாங்கி ஓடுகின்றனர்.

ஹா ஹா ஹா
அகிம்சை தேவதை நகைக்கிருள்.
அகிம்சை கோழைகளின் ஆயுதமல்ல
எதுவுமே கோழைகளுக்கு ஆயுதமாகாது
ஹா ஹா ஹா
திடீரென வயிற்றைக் கலங்கவைக்கும் அதிர்வு.
அந்த அதிர்வின்உருவாய் ஓடியவர்கள்வீசிய
துப்பாக்கியை எடுத்து
நீட்டியவண்ணம் வீரம் குலுங்க நிற்கிருன் பாரதி.

கிருதயுகத்தை கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசுதந்திரம்வேண்டி நின்ருர்- இங்கு
வேறெதும்கொள்ளுவரோ?

அவன் பாடுகிருன்.
அவன் பின்னே ஆயிரம் ஆயிரம் இளைஞர்.
அவன் உருவம் மாறிமாறிப் பல
தோற்றங்கள் எடுக்கிறது.

ஆக்காத்தி ஆக்காத்தி
நீ எங்கே நீ எங்கே?

நான் இங்கே நான் இங்கே
நான் இங்கே சங்கிலியன்

ஆக்காத்தி ஆக்காத்தி
நீ எங்கே நீ எங்கே

நான் இங்கே நான் இங்கே
நான் இங்கே சந்திரபோஸ்.

ஆக்காத்தி ஆக்காத்தி
நீ எங்கே நீ எங்கே

நான் இங்கே நான் இங்கே
நான் இங்கே கெப்பிற்றிபொல

ஆக்காத்தி ஆக்காத்தி
நீ எங்கே நீ எங்கே

நான் இங்கே நான் இங்கே
நான் இங்கே வ சி உ

ஆக்காத்தி ஆக்காத்தி
நீ எங்கே நீ எங்கே

நான் இங்கே நான் இங்கே
நான் இங்கே ஆபிரகாம் லிங்கன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இங்கே சேகுவரா
நான் இங்கே லூதர் கிங்
நான் இங்கே ஹோசிமின்
நான் இங்கே கென்யாட்டா

விடுதலை நோக்கிய இளைஞர் திரள்
கொடுமைகள் தகர்த்திடும் வீரரவர்.

தோளில் துப்பாக்கி
ஆக்காத்தி வீரர்களின் அணிநடை
புதிய கோஷம்-

பயந்தவர் உமக்கு
அகிம்சைஎதற்கு?
ஆயுதப் பயிற்சி
பயத்தைவிரட்டும்.

எடுஎடு துவக்கை
எதிரியை, விழுத்து
விடு விடு பயத்தை
வீணரை நொருக்கு

கொலையிடு கொலைபடு
பீதி அகலும்
மரணத்தை எதிர்கொள்
தியாகம் மலரும்

தியாகமே உண்மைத்
தெய்வீகமாகும்
யாகத்தில் சிறந்தது
விடுதலைத் தியாகம்

களத்தை நோக்கிய இளைஞரை காகங்களும் கழுகுகளும் எதிர்கொள்ளுகின்றன.
பட்பட் படபட டும்டும் டுமில்
படார் படார் தொம் தொமீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரப் போராளிகள் ஒவ்வொருவரது துப்பாக்கி வேட்டுகளும் வீரத்தின் எல்லைக் கோடுகளை தரிசித்து ஒளிர்கின்றன.
அந்த ஒளிர்வில் விடுதலையின் எல்லைஅரண்களாய் மரணித்துக் கிடக்கும் போராளிகளின் உடல்கள்.

ஆக்காத்தி ஆக்காத்தி

என்ன?

நீ கோபிக்காதே
இது ஒப்பாரியல்ல, ஆனந்தப் பள்ளு.

அப்போ பாடு.

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே முட்டையிட்டாய்?

நான் இட்ட இடமெல்லாம்
விடுதலையின் களமாச்சு.
நான் இட்ட இடமெல்லாம்
முற்போக்கு தளமாச்சு.

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கே உன் குஞ்செல்லாம்?

நான் பொரித்த குஞ்செல்லாம்
முற்போக்கு அணியாச்சு
நான் பொரித்த குஞ்செல்லாம்
பேர்மனிதக் கனியாச்சு.

o o o

ஆக்காத்தி ஆக்காத்தி
எங்கெங்கே......

சீ, வேண்டாம் நிறுத்து.

ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்போ ஆக்காத்தியல்ல

அப்போ?

நான் ஆண்டாள்.
இப்போ என்கைகளில் விலங்கில்லை
இது என் பூமி, இது என் அரசு.
நான் அதை ஆள்பவள், ஆண்டாள்
முன்பு நான் சொன்ன புதிய பாடல் புதிய யாப்பு
என் புதிய இருப்பு பற்றிய பாடல் இனித்தான் தேவை.

அதை நீயே பாடு.

கேள்-
என்பெயர் ஆக்காத்தியல்ல

நான் விடுதலை ஆண்டாள்
என் அகம் சுயப்பிரக்ஞை
என் மக்கள் தரிசனர்
நான் செல்லும் வழி விடுதலை
பேசும் மொழி உள்ளொளி
அமைக்கும் நாடு சுயராஜ்யம்

ஆனல் ஆனல்?

என்ன ஆனல்?

உனது அந்த உன்னத உலகின் பூரண விடிவுக்கு இன்னும் சில தடைகள் உள்ளன.

தடைகளா?

ஆம், தடைகள்தான். இல்லாவிட்டால் உனது புதுயுக உத்வேகம் என்னிலும் தொற்றிக் கொண்டிருக்கும். அது தொற்ருததற்குக் காரணம் இவைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அதற்குக் காரணம் நீ இன்னும் உன்னை வெறும் ஆக்காத்தியாக நினைத்துக் கொண்டிருப்பதுதான்.

இல்லை அதுவல்ல காரணம், இன்னும் எங்கள் பூமியில் அதிகாரப் போட்டி, சமூக ஏற்றத் தாழ்வு, வர்க்க வேறுபாடு, அரைவயிற்றுப் பட்டினி என்பவையெல்லாம் இன்னும் பூரணமாக மழிக்கப்படாமல் எச்சங்களாக நிற்கின்றன.

மிகச் சரி. இவைக்கெதிரான புதுப்புரட்சியில் நாம் இறங்கப் போகிறோம்.

நீங்கள் செய்யமுன் நாங்களே அதைச் செய்யப்போகி றோம். விடுதலைக்குப் போராடிய எங்கள் துவக்குகள் இனி அவர்கள் பக்கம் திரும்பப் போகிறது.

உஷ். அவசரப்படாதே. அதுவல்ல அவர்களுக்கு மருந்து. நமது தேசவிடுதலையே வெறும் ஆயுதத்தால் வெல்லப் படவில்லையே? பல எழுச்சிகளின் கூட்டுத் தாக்குதலே நம் விடுதலைக்கு காரணம். இந்த விஷயத்தில் நாம் இன்னும் ஆயுதப் பாவிப்பை குறைத்து, இதனை நாம் எமது பண்பாட்டுக்குரிய ஒரு புதுவித கலாசாரப் புரட்சி மூலம் ஆற்றுப்படுத்தலாம்...

எப்படி?

இப்போ நாம் இருப்பது சோஷலிஸத்தை நோக்கிய மாற்று வலயத் தளம். இந்த இடைப்பட்ட தளத்தில் நமது முரண் பாடுகளை அறுப்பதற்கு ஆயுத பாவிப்பு குறைக்கப்பட்டு வேறு தந்திரோபாயங்கள் முன்வைக்கப்படவேண்டும். அது தவறு செய்பவனை கொலைசெய்யாது, அவனையும் அவனது செயல்களையும் EXPOSE பண்ணுவதன் மூலம் திருத்து பவையாக, மாற்றுபவையாக அமைவது முக்கியம். அல்லா விட்டால் லெனினுடைய NEP கொள்கை மாதிரி பல பின்னடிப்புகளை நாம் எதிர் கொள்ளவேண்டிவரும். நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் போராட்டத்தின் போது கூட நாம் அந்நிய ஆக்கிரமிப்பாளனையும் நமது விடுதலைக்கு முட்டுக்கட்டை போட்ட நம் இன, மொழி மக்களையும் வெவ்வேறு போராட்ட முறைகளில் அணுகியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் நான் இப்போ சொல்வது இன்னும் கூடுத லாக விளங்கும். உதாரணமாக ஒரு முக்கியமான பிரமுக ரோ, ஒரு புத்திஜீவியோ அல்லது சாதாரண ஒரு மனிதனோ நம் விடுதலைக்கு குந்தகம் செய்யும் போது, முதலில் அவரது குற்றங்களை வரிசைப்படுத்தி, ஓர் இடத்தில்,' மக்கள் முன்னிலையில் நிறுத்தி அவரை, EXPOSE பண்ணவேண்டும். அதற்கும் அடங்காவிட்டால்தான் அவருக்கு மரண தண்டனை, நான் சொல்லுவது சரியா? ஏன் மௌனமாய் இருக்கிறாய்?

அப்படியானால் நாடு விடுதலை பெற்ற பிறகுள்ள இந்தச் சூழலில் எமக்குள்ளே உள்ள முரண்பாடுகளை இன்னும் அவதானமாக, ஸ்னேக முரண்பாடாய் அணுக வேண்டும் என்கிறாயா?

நிச்சயமாக. ஆனால் ஏன் அவதானம்? அதுதான் முக்கியம்: நமது விடுதலைப் போராட்டம் மனிதனின் உண்மையான மேன்மை சுபாவத்தை சென்றடைய வழிகாட்டுவதாகும். அந்த மேன்மைச் சுபாவம் அன்பு, அறிவு, உண்மை உடை யது. அந்தச் சுபாவம் அதிகரிக்க அதிகரிக்க நமது ஆயுதப் பாவிப்பும் தானாகவே வாடி உதிரும். ஆனால் அதற்கு எவ்வளவோ காலம் உண்டு. அதற்கு முதல்படியாக நான் திட்டமிட்டுள்ள கலாசாரப் புரட்சி அமையவேண்டும். அது மனிதனின் போராட்ட முறையையே மாற்றியமைக்கக் கூடியது.

போராட்ட முறையா?

ஆம், மனிதன் விலங்காய் இருந்தபோது எப்படி ஆயுதம் கொண்டு, வேட்டையாடி வாழ்ந்தானோ அதே மாதிரியே இன்னும் அவன் தன் எதிரியை ஆயுதங்கொண்டு தாக்கு கிறான். இன்னும் அதே மிருக குரூரம், அதே மிருக எச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட வேறு வழியில்லை?

இல்லை, அது தவறு. இதை முதன் முதலில் மாற்றியவர் காந்தி. முதன் முதலாய் மனிதனின் உயர்ந்த பரிணாமத் தன்மையான அன்பையே ஆயுதமாக்கினார் அவர். இதனால் அவர் முதன் முதலில் மனிதனை மிருக எச்சத்திலிருந்து விடுவித்து, பூரணமான மனித தளத்தில் ஏற்றினார். அவனிற்கு விலங்கிலிருந்து விடுதலை கொடுத்தார்.

ஆனால் காந்தியை நினைக்கும்போது பல பிற்போக்கு தளங்களும் சேர்ந்து இழுபடுவதுபோல் எனக்கு படுகிறது.........

இருக்கலாம். காந்தியின் எல்லாச் செயல்களையும் நான் சரியென்று சொல்லவரவில்லை. ஆனால் காந்தியின் தலையாய பங்களிப்பு இதுதான்: மனிதனை முதன் முதலாக மிருக எச்சத்திலிருந்து விடுவித்தது. காந்தியை அப்படித்தான் நாம் பார்க்கவேண்டும். அப்படிப்பார்க்கும்போது காந்தி எல்லா புரட்சிக்காரர்களையும் விட முன்னிற்பது தெரிய வரும்.

அப்படியானால்?

நாங்களும் எங்கள் போராட்ட முறையை இன்னும் ஆழமாக்கிக்கொள்ள வேண்டும். வாழ்க்கைபற்றிய வெற்று விஞ்ஞான லோகாயத அணுகுமுறைகள் இதற்கு உதவப் போவதில்லை. ஆதிக் கலாசார வழித்தோன்றல்களாக கூறிக்கொள்ளும் நாங்கள், எங்கள் மரபிலிருந்து ஆழமான புதுப் போராட்ட முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். காந்தி சாத்வீக குணத்துக்குள் அதைக் கட்டுப்படுத்தியது ஒரு குறை. அதையும் நாம் உடைத்தெறிந்து, ஜனகன் போல் பூரண வாழ்க்கையில் நின்று அதை விரிவு படுத்த வேண்டும்.

ஒரு சந்தேகம்.

என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி எவ்வளவு அகிம்சை பேசியும் ஒன்றைச் செய்ய வில்லை. அவர் இந்திய இராணுவத்தைக் கலைத்திருந்தால் தான் உண்மையான அகிம்சைவாதியாக எடுத்துக் கொள்ள லாம்.

அதற்கு அயல்நாடுகளின் பக்குவமற்ற நிலை இடம் கொடுத் திருக்காது.

இடம்கொடுக்க செய்திருக்க வேண்டும். காந்தி தன் அகிம்சை ஈர்ப்பு வலயத்துள் அவற்றையும் விழுத்தியிருக்க வேண்டும்.

உண்மை. அதற்குமுன் அவர் மறைந்துவிட்டார். ஆனால் நாம் அதைத் தொடருவோம். இன்றே இப்பொழுதே.

o o o

ஒருவன் நிற்கிறன். மனித உடம்பு. கரடித்தலை. அவன் சோஷலிச மனிதன். இன்னொருவன் நிற்கிறன். மனித உடல். பாம்புத்தலை. அவனும் சோஷலிச மனிதன். வேறொருவன். மனித உடம்பு. காண்டாமிருகத்தலை. இவன் ஜனநாயக மனிதன்.

அடுத்தொருவன். மனித உடம்பு. சிங்கத்தலை. இவனும் ஒரு பாராளுமன்ற மனிதன். இவர்கள் எல்லோரும் குரூர ஆயுதங்கள் கொண்டு தமக்குள் அடிபட்டுக் கொள் கின்றனர். குதறப்பட்டுக் கொள்கின்றனர். இரத்தம் பாய்கிறது.

அப்பொழுது அவர்களை நோக்கி ஒருவர் நடந்து வருகிறர். காந்திபோல் தோற்றம்.
ஆனல் காந்தியல்ல.

தமக்குள் சண்டைபிடித்துக் கொண்டவர்கள் தமது சண் டையை திடீரென நிறுத்தி அவரைப் பார்க்கின்றனர். அனைவரும் காந்தியைக் கொன்ற கோட்சேயின் நிழல் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னல் ஆட தமது ஆயுதங்களை எடுத்து குரூரமாக அவரைத் தாக்க அவரை நோக்கி வீசுகின்றனர். துப்பாக்கியால் சுடுகின்றனர். ஆனல் ஒன்றும் அவரைத் தாக்கியதாக இல்லை. அவர்கள் வீசிய ஆயுதங்களும், வைத்த வேட்டுக்களும் அவரை எட்டமுடியாது வீழ்கின்றன.

அவர் தொடர்ந்து புன்னகைத்தவாறு அவர்களை நோக்கி வருகிறுர். அவர் அவர்களை நெருங்கி வர வர இவர்கள் மிருகத்தலைகள் மனிதத் தலைகளாக மாறத் தொடங்குகின்றன. அவர்கள் முகங்களிலும் மெல்ல மெல்ல ஆனந்தம் விடிந்து புத்துலக ஆரவாரமாக சர்வ திசைகளிலும் எதிரொலிக்கிறது.

o o o

ஆண்டாள், உன்னை ஏன் அவர்கள் ஆயுதங்கள் தாக்க முடியவில்லை?

ஏனு? என் தள ஈர்ப்புக்குள் அந்த ஆயுதங்கள் இறங்கும் வலுவற்றவை. அதனுல்.

நான் பாடட்டா?

ம் தொடங்கு பாடுவோம்.
விழுந்தது விழுந்தது மனிதனை முடக்கிய விலங்கு
அழிந்தது அழிந்தது அவன் முகம் தாங்கிய குரங்கு
வேரொடு கழன்றது வால்களின் எச்சம்
விடுதலை மனிதக் கால்களில் நடந்தது.

விடுதலை இருக்கையில் மானிட அமர்வு
மானிட இருப்பே விடுதலை என்றினித் தெளிவு
விடுதலை விடுதலை எல்லைகள் இல்லை
காக்கப்படுவதும் காப்பதுமில்லை
காவல் எமக்கு விடுதலையாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் எழுச்சிப்பாடல்

உண்மை காணத் திரண்டார்
விடுதலைக் கெழுந்தார்
புதியபாதை விதியமைத்து போக்கை மாற்றி
வாழ்க்கை முறையை
புனரமைக்க விரைந்தார். (உண்மை)

கண்ணை மூடிக் கிடந்தோர் கனவு விட்டெழுந்தார்
காலஞ்சென்ற கொள்கைக் கெல்லாம்
ஆப்பு வைக்க விரைந்தார். (உண்மை)

போலிகள் விழுந்தன, உண்ணிகள் கழன்றன
காலதேவன் வாளெடுத்தான்
கயமை, மடமை, அடிமை யாவும்
கலகலக்க நடந்தார். (உண்மை)

செங்கதிர் எழுந்தான், கங்கை பொங்கிற்று
சாதி, இனம், சமயம், வர்க்கப் / பாறைமீது வீற்றிருந்த
கழுகுகள் விழுந்திறக்க / காளைகள் நடந்தார்
விடுதலைக் கெழுந்தார். (உண்மை)

(1970)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களும் சும்மா இருத்தலும்

**In the beginning there was word and the word was with God and the word was God.**

**- BIBLE**

சொற்கள் வானிலிருந்து மழைபோல் சொரிந்து
கொண்டிருக்கின்றனவா?
ஓசைகளின் பலவர்ண தெளிவுகளின் ஊடே
சொற்களின் சொரிவு.
சொற்களே ஓசை, ஓசையே சொற்கள்.
ஓசை சொற்களின் உருவம். கருத்து அதன் உள்ளடக்கம்.
இசைக்கு எது உருவம்? எது உள்ளடக்கம்?
ஓசை ஜாலங்களே, வர்ணங்களே
அதன் உள்ளடக்கமும் உருவமும்.
இசையின் கருத்தற்ற ஓசைஜாலங்களில்
மகத்தான கருத்தறிந்து மெய்யழியும் உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் என்ற 'கருத்த'ற்ற ஓசையில், திடீரென
கருத்தொளிர மெய்யுணரும் மனங்கள்.

ஓசையே சொற்கள், சொற்களே ஓசை.
கிளியின் சொற்கள், குருவியின் மிழற்றல்,
விலங்குகளின் அலறல், காற்றால் உதைபடும்
தென்னைகளின் கூப்பாடு, மரங்களின் ஓலம்,
இயற்கையின் மின்னிடி அதிர்வுகள்,
மனிதமொழிகள் எல்லாமே சொற்கள்தான்,
ஓசைகள்தான்.
விடுபட்ட ஓர் நிலையில் இந்த ஓசைகள், இந்தச்
சொற்கள் எல்லாமே ஒன்றோடொன்று மோதி,
இணைந்து, ஒன்றாகி பெறும் "ம்"........."ஓம்"
என்ற ஓசையே, நாதவெள்ளமே மிஞ்சுகின்ற உண்மை.
– அந்த ஒன்றே பலவாகி, பின்னர் அதுவே ஒன்றாகி –
தொனிப்புற – சொற்கள்.
இந்தப் பிரபஞ்சமே "ஓம்" என்ற இந்த ஓசையின்
திணிவில் புடைத்தெழுந்து அல்லது
இந்த ஓசையை உள்ளிழுத்து
புடைத்து உருண்டுகொண்டிருக்கும் கும்பக சொரூபமா? –
யோகமா?

உண்மைக் கலைஞன் ஜெபமாலையின் ஒவ்வொரு மணியாக வருடிக்கொண்டிருக்கும் யோகிபோல் ஒவ்வொரு சொல் லாக கையில் எடுத்து வருடிப்பார்த்து தனது தேவைக் குகந்தவற்றை எடுத்தும் அல்லாதவற்றைத் தள்ளியும் தனது கலாமாலையைக் கோத்துக்கொண்டிருக்கிறான்.

தள்ளப்பட்ட சொற்கள் பின்னோர் சமயத்தில் கொள்ளப் படுகின்றன.

கொள்ளப்பட்டவை வேறோர் நிலையில் தள்ளப்படுகின்றன. தேவைகளைப் பொறுத்து. இரத்தினக்கல் வியாபாரிபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞன் சொற்களைப் புரட்டிப் புரட்டிப்பார்த்து அவற்றின் சுடர்களை அறிகிறான். ஓசையின் உள்ளொளி காண்கிறான். அவன் தரிசனக் கலைஞன். வாழ்க்கையின் வழிகாட்டி.

மனிதன் என்பவன் சொற்களின் கூட்டு.
அதாவது ஒவ்வொரு மனிதனும்
ஒவ்வொரு எண்ணத்தொகுப்பு.
அவனவன் வட்டத்து எண்ணங்கள்.
எண்ணங்களைப் பொறுத்து வட்டங்களின் விரிவு, விடுதலை.
அதே எண்ணங்களைப் பொறுத்தே
அவரவர் வட்டங்களைச் சுற்றிச் சுழலும்
ஒளிவட்டங்களின் தன்மைகளும் நிறங்களும் வாடைகளும்.
எரியும் தீக்குச்சித் தலைகள்போல் ஓசைக்கடலில் மிதக்கும்
மனிதரெனும் வார்த்தைக் கூட்டங்கள்.
தம்நிலையில் நிர்குண ஓசைகளாய்மிதக்கும் வார்த்தைகள்,
ஒவ்வொரு மனித இருப்புக்குள்ளும் சிந்தனைகளாக
உட்புக பலவர்ண ஒளியேறி
நிறமாலைகளாக அவனைச்சுற்றியே கவிகின்றன.
உணவுதேடல், உட்கொள்ளல், இனவிருத்தி - எனும்
தீங்கற்ற எளிமைக்குள் வாழும்,
அணைந்தணைந்து வீழும் அற்ப பொறிகள்.
அநேகமாக சிந்தனை மினுங்காது, சொற்களின் சூழ்வற்று,
இரண்டொரு சொற்களின் சலிப்புறும் மீட்டலோடு
நடைபெறும் சும்மா வாழ்க்கை, இது.
இதுவும் சொற்களின்றி சும்மா இருக்கும்
ஒரு வாழ்க்கைதான்.
சதா தீய நினைவுகளையே வெளிவிட்டுக் கொண்டிருக்கும்
கரும்பொறிகள் இன்னொரு வகை.
சிலர் நாக்கில் ஏறிய கரும்புள்ளிகள்போல் இவர்கள்
ஒளிவட்டங்களைச் சுற்றி எண்ணிறந்த கரும்புள்ளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய போர்க்குணமும் அகோரமும் தெறிக்கும் இன்னோர் வகை.

செவ்வொளி வட்டங்களிடையே தகதகக்கும் எண்ணற்ற கடுஞ்செம்புள்ளிகள்.

அன்பும் சாந்தமும் ஆண்மையும் நன்னீர் ஊற்றாய் கசிவுற, அருகிருக்க இருக்க இன்பூட்டும், கிளர்வேற்றும், குளுமை யூட்டும் சந்தன ஒளிவட்டங்கள். இன்னொரு வகை.

அதுவே மனிதஇனத்தின் முதன்மைபெறும் அணி.

சொற்களால் வேயப்பட்ட மனிதன்.
ஒவ்வொரு சொற்களும் அவனைச் சுற்றி மொய்த்து
மினுக்கங்காட்டிய வண்ணம்.
படங்களைச் சுற்றி மின்குமிழ்களை
மாலை வடிவில் மொய்க்கவிட்டதுபோல்,
மனிதனைச் சுற்றி மினுக்கங்காட்டும் சொற்களின் வண்ணம்.
சொற்களின் சோதியுள்
மனிதனின் ஆதிஅந்தங்கள் அடக்கம்.

2

சும்மா இரு.
சும்மா இருத்தல் விடுதலை பயப்பது.
சும்மா இருத்தல் என்பது விடுதலையில் இருத்தலாகும்.
சும்மா இரு என்றால் சொற்களைவிட்டு பிரிந்திருப்பதா?
சும்மா இருத்தல் –
சொற்களைவிட்டு பிரிந்திருத்தல் அல்ல
சொற்களுள் புகுந்திருத்தல்.
சொற்களுள் புகுதல் என்பது
ஒவ்வொரு சொல்லின் மூலத்துள் புகுதல்.
மூலம் எது?
ஓம் ஓம் என்னும் நிர்க்குண நாதக்கடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருத்தலை அறிய நான் அவாவியபோது என்காதுள்
ஒருவர் சிலவார்த்தைகளை உபநிஷித்தார்.
நான் அவற்றைப்பற்றி ஏறி அவற்றுள் புகுந்தேன்.
ஏவுகணை எடுத்துச் சென்ற மனிதன் அந்தரவெளித்
தங்குநிலையத்தில் இறங்கியதுபோல் நான் அந்த ஓம்
என்னும் மந்திரவெளியில்.

அது நிர்க்குண நாதவெளி.
ஒன்று வெளித்தது.
சொற்கள் எல்லாமே மந்திரங்கள்.
நல்லவை கெட்டவை என்று அவற்றில் இல்லை.
நம்மை நாதபூமிக்கு எடுத்துச் செல்லும்
மந்திரங்கள் அவை.
எவனும் எதையும் சொல்லலாம்.
சதா பூமியில் சொரியப்பட்டுக் கொண்டிருக்கும் சொற்கள்.
அவை கேட்பவனைப்பொறுத்தே கிளர்வேற்றும் மந்திரங்கள்.
அவை ஏந்தும் பாத்திரங்களைப் பொறுத்தே
இயக்கமுறும் இயந்திரங்கள்.
சொற்களால் சொல்லமுடியாதது என்ற ஒன்றில்லை.
சொல்லமுடியாது என்பவன்
சொற்களின் சுருதியை அறியாதவனே.

o o o

15, 16 வயதிருக்கும் ரமணருக்கு.
இரு மாணிக்கச் சுடர்களாய் ஒளிவிடும் கண்கள்.
துடியாடித்தனமாகத் திரியும் காலம் அது.
அப்போது ரமணர் தனக்குத் தெரிந்த ஒரு மனிதரை
வழியில் சந்திக்கிறார்.
"நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?" ரமணர் கேட்கிறார்.
"அண்ணாமலையிலிருந்து" மற்றவரின் பதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணுமலை!

ரமணரின் இதயநாளமெங்கும் ஓர் அதிர்வு.

''அண்ணுமலை'' என்ற அந்தச்சொல் அடிவானத்திலிருந்து திடீரென ஆரம்பித்து வான்முழுதும் கிளைவிழுத்திச் செல்லும் மின்தெறிப்புப்போல் அவர் உடலெங்கும் மின்னேறிச் செல்கின்றது.

''அண்ணுமலை'' ரமணரின் மனம் அசைபோடுகிறது.

இத்தனைக்கும் ரமணருக்கு
அண்ணுமலைபற்றி எதுவுமே தெரியாது.

அவர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை.

அண்ணுமலை என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது?

இதுகாலவரை கேள்விப்படாத அந்தச்சொல்
அவரை ஏன் அப்படி உலுக்கிற்று?

அண்ணுமலை பற்றி அறியவேண்டுமென்ற ஆவல்
அவரை உத்வேகம் கொள்ளச்செய்கிறது.

அந்தச்சொல்லை உச்சரிக்க உச்சரிக்க மத்தாப்புச் சிதறல்கள்போல் ஆயிரம் அர்த்தங்கள், ரகசியங்கள், விளக்கங்கள் ரமணருக்கு படைபடையாய் கிளறப்பட்டனபோல் விரிந்தது. அவற்றின் மூலத்தை அறியவேண்டுமென்ற வேட்கை அவரை முன்தள்ளிற்று.

அவ்வளவுதான்.

உடனேயே ரமணர் அண்ணுமலையைத் தேடத் தொடங்கி விட்டார்.

o o o

ஓ காற்று வருகிறது.

ஓ காற்று வருகிறது.

பனைமரங்கள் ஓவென அலற,

தென்னைகள் தலையில் கைவைத்துக் கூப்பாடுபோட,

காவோலைகள் கலகலத்து வீழ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஓலைவீட்டுக் கூரையை அள்ளிக்கொண்டு
போவதுதான் சோளகமா?

போகிற போக்கில் ஒருக்கால் பெரும்பருந்துபோல்
சளார் என என் முற்றத்தில் கீழிறங்கி
குவிந்துகிடந்த வேப்பஞ் சருகுகளை
ஓர் சுழற்று சுழற்றி, கோலி எடுத்து
உள்ளங்கையில் வைத்துப் பார்த்துவிட்டு
மீண்டும் "பூ" எனஊதி சிதறிவிட்டு
எக்காளமிட்டுக் கொண்டோடும்
அந்தச் சோளகம் ......

ஓ காற்று வருகிறது.
கடலிலிருந்து பெயர்ந்து காற்று வருகிறது.
பாட்டம் பாட்டமாய் பெயர்ந்து வருகிறது.
ஒவ்வொரு பெயர்ச்சியிலும் தன் அருபத்துக்கு
இயற்கைப் பொருட்கள்மூலம் ரூபமேற்றி
அது வருகிறது.

அதன் தூரவருகையை மோப்பம் பிடிப்பனபோல்
செவியுதறும் இலை தழைகள், ஜடப்பொருட்கள் –
முற்றத்தில் என் சிறுசுகள்
விளையாடிவிட்டுக் கிடந்த வெற்றுத் தகரம்
கடகடத்து உருள்கிறது.
தொங்கும் காவோலைகளின் சளார் சளார் உராய்வு
முற்றத்து மண் அள்ளப்பட்டு எங்கும் விசிறப்படுவதால்
ஒரேநேரத்தில் தட்டி, பெட்டி, குடிலெங்கும் விழும்
எண்ணற்ற ஒலித்துணுக்கைகளின் சரமாரி.
வெற்றுப் போத்தலை உருட்டி உள்நுழைய
பூம் பூம் என குழல்மீட்டும் ஓசை.
எல்லா ஜடப்பொருட்களுக்கும் ஒலியேற்றி, மொழியேற்றி
பேச்சிறந்த ஒவ்வொரு பொருட்களின்
பொதுப் பாஷையாய் வரும் காற்று ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் எல்லா ஒலிகளையும் மொழிகளையும்
குழைத்துத் திரட்டி
"ஓம்" எனும் ஒற்றை ஒலியில் புகுத்தி
எங்கோ விரைந்து புதையுண்ணும்.
மீண்டும் புதைவு நீங்கி தனித்தனி
மொழி மிழற்றி வரும் -
போக்கும் வரவும் -
"ஓம்" மின் வாகனமாய் வரும் காற்றே
கடவுள்போல் உருத்தெரியாவிட்டாலும்
அனைத்துக்கும் உயிர்ப்பேற்றி, உணர்வேற்றி
சிரித்தும், சினந்தும், ஆக்கியும், அழித்தும் -
ஓ காற்று வருகிறது......ம்...ம்...ம்...ஓம்......

(1980)

117030



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம் வெளியீடு - 1
நெடுங்குடுதீவு
மார்கழி, 1986

''இங்கு தரப்பட்டுள்ள ஆக்கங்கள் தத்தம் விடுதலைப் பாங்கான உருவங்களையே கொண்டுள்ளன. இவற்றின் உருவங்கள் அவை தரும் கருத்தின் இயல்பால் தீர்க்கப்பட்டவை. அதனுல் இவை உங்களுக்குத் தெரிந்த கவிதை, கதை, கட்டுரை என்கிற எல்லைக் கட்டுகளால் வரம்பறையப்படவில்லை. ஆனுல் அந்த எல்லைக் கட்டைகளைக் கொண்டே வெவ்வேறு வரம்பு முறைகள் சுயவியக்கம் கொண்டுள்ளன. அந்த முறையைத்தான் மு. த. ''மெய்யுள்'' என்ருர்.''

அச்சமைப்பு: அ. மரியதாஸ்
அட்டை: நிதர்சன்
ரூபா: 15-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org